விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 30 செவ்வாய்க்கிழமை (15.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 362

## மருதனார்மடம் கொத்தணி
## மேலும் 6 பேருக்கு தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் பொதுச் சந்தை கொரோனா கொத் தணியில் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் உடுவில், இணுவில், ஏழாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## மறு அறிவித்தல் வரை
## யாழ்., வலிகாமம் கல்வி வலய சகல பாடசாலைகளும் மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மற்றும் யாழ்ப் பாணம் கல்வி வலயங்களுக்கு உட்பட்ட அனைத்துப் பாடசாலை களும் இன்று செவ்வாய்க் கிழமை முதல் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்படு வதாக வட மாகாணக் கல்வி அமைச்சின் 19

## வெடிபொருளை கிரைண்டரில் அரைத்ததில் வெடித்துச் சிதறியது
### சிறுவர் உட்பட 8 பேர் படுகாயம்
### யாழ்.குருநகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

டைனமைற்றை தயாரிப்பதற் காக பயன்படுத்தும் ரி.என்.ரி வெடிபொருளை கிரைண்டரில் அரைத்ததில் குறித்த வெடிபொருள் தீப்பற்றி 19

## யாழ்.மாவட்டத்தில் பூட்டப்படும் சந்தைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத் தில் கொரோனா 19

## நெடுந்தீவில் 19 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களில் 19 பேரை இலங்கைக் கடற்படை யினர் நேற்று கைது செய் துள்ளனர்.

நெடுந் தீவுக் கடற்பரப்பில் தொடர் 19

## ஒரு பிரதேசத்தை முடக்குவதில் பயனில்லை
# யாழ்.மாவட்டத்தில் பரவலாக தொற்றாளர்கள் அடையாளம்
### யாழ்.அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பரவலாக தொற்றாளர்கள் அடை யாளம் காணப்படுவதால் தனியே ஒரு பிரதேசத்தை மாத்திரம் முடக்குவது பயனில்லை என்பதாலேயே உடுவில் பிரதேச முடக் கம் தளர்த்தப்பட்டதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலை குறித்து நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கும் போதே கணபதிப்பிள்ளை மகேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த ஒக்ரோபர் மாதத்திற்கு பிறகு 59 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இதில் 18 பேர் குணமடைந்து வீடு திரும்பி யுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் 19

## வவுனியா நகரில் 4 பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டன

(வவுனியா)

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட 4 நகரப் பாடசாலைகள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக் கம் மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக வவுனியா தெற்கு 19

## எழுமாற்றுப் பரிசோதனையில் வவுனியாவில் இருவருக்கு தொற்று
### வடக்கில் மேலுமொரு கொரோனா கொத்தணி

(வவுனியா)

வவுனியாவில் எழுமாற்றா கச் செய்த பரிசோதனையில் இருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப் பட்டுள்ளது.

மருதனார்மடத்தைத் தொடர் ந்து வவுனியாவில் கொரோனா கொத்தணி உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவ ட்ட பொது வைத்திய 19

## யாழில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும்
### பிசிஆர் பரிசோதனைகள் அதிகரிக்கப்படும்
### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்கள் சுகாதார நடைமுறையை பின் பற்றி அவதானமாக 19

## அரசியல் கைதிகளின் விடுதலைக்காக
## விசேட பொறிமுறைக்கு நீதி அமைச்சு நடவடிக்கை
### அங்கஜன் இராமநாதன்

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளின் விடு தலைக்காக, விசேட பொறிமுறையை உரு 19

## பளைக்குச் சென்ற மருதனார்மடம் தொற்றாளர்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம்கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய நபர் 19

## நாட்டில் மேலும் இருவர் கொரோனாவுக்கு பலி
### நேற்றும் +688 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று திங்கட் கிழமை கோவிட் -19 நோயால் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக் களம் அறிவித்துள்ளது. 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அச்சுவேலிப் பகுதியில் 38 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலில்

(கரணவாய்)

அச்சுவேலி, கதிரிப்பாய் பகுதியில் 38 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மருதனார்மடம் பகுதியில் சந்தை வியாபாரத்தில் ஈடுபடும் பெண் ஒருவர் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகி உள்ளார்.

இதனையடுத்து குறித்த பெண் அச்சுவேலி, கதிரிப்பாய், வாகையடி பகுதியில் இடம்பெற்ற மரண வீட்டுக்கு வந்து சென்றுள்ள நிலையில், சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமைய குறித்த குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

(ம-03,60)


## வாழ்க்கைத் துணை தேவை


விழிப்புலன் இழந்த, ஆரோக்கியமான, கௌரவ இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு தியாக சிந்தையுடைய 40 தொடக்கம் 45 வயதிற்குட்பட்ட வாழ்க்கைத் துணை தேவை.

077 315 1326, 076 890 4581


# 2433 கிலோ மஞ்சளுடன் மன்னாரில் மூவர் கைது!

(மன்னார்)

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட 2 ஆயிரத்து 433 கிலோ கிராம் மஞ்சள் கட்டி மற்றும் 50 கிலோ ஏலக்காய் போன்றவை தலைமன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள கட்டுக்காரன் குடியிருப்பு பகுதியில் வைத்து நேற்று திங்கட்கிழமை காலை கைப்பற்றப்பட்டுள்ளது.



மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி கட்டுக்காரன் குடியிருப்பு காட்டுப் பகுதியில் அமைந்துள்ள கோயிலுக்கு சற்றுத் தொலைவில் கடற்கரை பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை நிறுத்தி வைக்கப்பட்ட மகேந்திர ரக வாகனத்தில் குறித்த மஞ்சள் மூடைகள் மற்றும் ஏலக்காய் மூடை என்பன இராணுவம் மற்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

குறித்த கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் பொலிஸார் குறித்த நபர்களிடம் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ம-03,285)


# கேள்வி அறிவித்தல்
## சபை நிதி வேலைத் திட்டம் (Council)-2020
### கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி

1. தலைவர்,பெறுகைக்குழு, கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி வடமாகாணம், கரைச்சி பிரதேச சபை சார்பாக தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றபோதும் Covid 19 இனைகிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட கேள்விதாரர்களிடம் இருந்து மாத்திரமே கேள்விகள் பெறப்படும் வகையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையானதகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி IV இல் காட்டப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி (தொலைபேசி: 021-228 5761, தொலைநகல் 021-228 5690) மின்னஞ்சல்** kilinochchi1kps@g mail.com இல் இருந்து மேலதிக தவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **காலை 9.30மணி முதல் பிற்பகல் 14.00 மணி வரை 30.12.2020ஆம் திகதி** வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி எனும் இடத்தில் 15.12.2020 ஆம் திகதியிலிருந்து 28.12.2020 வரை காலை 9.30 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000.00 (வரிநீங்கலாக)** செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A9வீதி, கிளிநொச்சி** எனும் முகவரிக்கு30.12.2020ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது,கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகை குழுவிற்கு அதிகாரம் உண்டு.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தியேழு - 17.03.2021) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவினால் எடுக்கப்படும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/Council/KPS/KI/StreetLight/KAPS/G-50w/2020 | வீதி விளக்குகளைக் கொள்வனவு செய்தல் - 50w (Supplying ingle water proof street Lamp 50W) | 1.75 | 01மாதம் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 17,500.00 | 14.04.2021 |
| NP/Council/KPS/KI/StreetLight/KAPS/G-100w/2020 | வீதி விளக்குகளைக் கொள்வனவுசெய்தல் - 100w(Supplying single water proof street Lamp 100W ) | 0.95 | 01மாதம் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 9,500.00 | 14.04.2021 |

11. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் **24.12.2020ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு, தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி** எனும் முகவரியில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்**
**பெறுகைக் குழு**

(C-914)

**கரைச்சி பிரதேச சபை, A9 வீதி,**
**கிளிநொச்சி, வடக்கு மாகாணம்.**


# சுயதனிமைப்படுத்தப்பட்ட முதியவர் திடீர் மரணம்

(நுவரெலியா)

சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த 10 பேரில் ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளதாக பொகவந்தலாவ பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ மோரா கீழ் பிரிவைச்சேர்ந்த 84 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையே நேற்று காலை திடீரென மரணமாகியுள்ளார்.

மரணமானவரின் பேரன் கொழும்பு சீதுவ பகுதியிலிருந்து மோரா தோட்டத்திலுள்ள வீட்டிற்கு வந்த நிலையில் பொகவந்தலாவ பொது சுகாதார அதிகாரிகளினால் குறித்த இளைஞன் உட்பட குடும்பத்தினருமாக 10 பேர் அவர்களது வீட்டில் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு சுயதனிமைப்படுத்தி ஐந்து நாட்களில் மேற்குறிப்பிட்டவர் திடீரென மரணமாகியுள்ளார். மரணமானவருக்கு பி.சி. ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-03)

# பி.சி.ஆர் பரிசோதனைக்கு ஒத்துழைக்காதவர்களின் சொத்துக்கள் முடக்கப்படும்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

பி.சி.ஆர் பரிசோதனை மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காமல் இருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியிருக்கும் பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, சொத்துக்கள் முடக்கப்படும் எனக் கூறியுள்ளார்.

வைரஸ் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள அட்டலுகம போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று தெரிய வந்துள்ளது.

இது தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பான செயற்பாடாகும். அதனால் இத்தகைய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும்.

இதன்போது அவர்களது சொத்துக்களை பயன்படுத்த முடியாத வகையில் தடைமுத்திரை குத்தவும் அனுமதியுள்ளது. அதனால் சுகாதார தரப்பினரின் ஆலோசனைக்கமைய செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (ம-03)

# மொரோக்கோ படகு விபத்தில் வவுனியா இளைஞர்கள் இருவர் உயிரிழப்பு

(கரணவாய்)

ஆபிரிக்க நாடான மொரோக்கோ பகுதியில் இருந்து ஸ்பெயினுக்கு கடந்த 3ஆம் திகதி புகலிடக்கோரிக்கையாளர்களை ஏற்றிக்கொண்டு பயணித்த படகொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான படகில் பயணித்த 9பேர் இறந்துள்ளனர். இதில் இலங்கையைச் சேர்ந்த இருவர் உள்ளடங்குவதாகவும் அவர்கள் வவுனியா குருமன்காடு பகுதியை சேர்ந்த ப.பிரசன்னா (வயது-27) மற்றும் கோதண்ட நொச்சிக்குளம் பகுதியை சேர்ந்த மகேந்திரன் கவிஞன் (வயது-24) ஆகிய இருவரது உடல்கள் மொரோக்கோவில் உள்ள 'லைவான்' வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-03,60)

# எனது சட்டியில் வேகுவதைப் பாராமல் உங்கள் சட்டிகளில் கருகுவதைப் பாருங்கள்

## செல்வத்திற்கு வியாழேந்திரன் பதிலடி

(கொழும்பு)

"எனது சட்டியில் என்ன வேகுது என்று பாராமல், உங்கள் சட்டிகளில் என்ன கருகுது என்று பாருங்கள்" என, தபால் துறை மற்றும் வெகுசன ஊடக தொழில் அபிவிருத்தி, பின் தங்கிய கிராம அபிவிருத்தி, கால் நடை வளர்ப்பு, சிறு வர்த்தகப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

"இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் போன்றவர்களால் பேசமுடியும். ஆனால், செயல் வடிவம் கொடுக்க முடியாதென", மட்டக்களப்பில் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மட்டக்களப்புத் தொகுதிக்கான இளைஞர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில், கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியான அடைக்கலநாதன், தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்த தீர்வுகளும் அதிகாரங்களும், சொல்லில் அடங்காதவை. 72 வருட காலத்தில் அவர்கள் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தவைகளை வைப்பதற்கே இடமில்லாமல் உள்ளது.

"அடைக்கலநாதன் அண்ணன் உட்பட, நான் பலருக்குச் சொல்லும் அறிவுரை என்னவெனில், வியாழேந்திரன் என்ன செய்கின்றார், அவர் தலை சொறிகின்றாரா, மூக்கைச் சொறிகின்றாரா என்று பார்க்காமல், வியாழேந்திரனின் சட்டியில் என்ன வேகுது என்றும் பாராமல், உங்கள் சட்டிகளில் என்ன கருகுது என்று பாருங்கள்.



"எனது அலுவலகத்தில் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக வருகின்றார்கள். அடைக்கலநாதன் போன்றவர்களால் எதுவும் செய்ய முடியாது என்பது அந்த மக்களுக்குத் தெரியும். மக்கள் எங்களிடத்தில் வீடு, வேலைவாய்ப்பு, வீதி என்பவற்றைப் பெற்றுத்தாருங்கள் எனக் கேட்டார்கள். அதைத்தான் நாங்கள் தற்போது செய்து வருகின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர் மரணம்

(அவிசாவளை)

அவிசாவளை ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் நபர் ஒருவர் நேற்று முன்தினம் திடீரென மரணமடைந்துள்ளார்.

தொழிற்சாலையில் இருந்து தனது சொந்த இடமான பலாங்கொடை பிரதேசத்திற்கு சென்ற நிலையில் அவர் திடீர் சுகயீனம் அடைந்துள்ளார்.

அவர் பம்பகின்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலாங்கொடை பம்பகின்ன கலகம பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய எச்.டி.நுவன் என்ற ஆடைத்தொழிற்சாலை ஊழியர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக இம்புல்பே சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது. (நி-7)

# இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(மெல்போர்ன்)

அவுஸ் திரேலியாவில் இலங்கையை சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வருணராஜ் ஞானேஸ்வரன் என்ற 18 வயதான இளைஞரே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளதாக தமிழ் ஏதிலிகள் கழகத்தின் பேச்சாளர் அரன் மயில் வாகனம் தெரிவித்துள்ளார்.

அவுஸ் திரேலியாவுக்கு தனது தாய் மற்றும் தங்கையுடன் படகு மூலம் வந்து புகலிடம்கோரிய வருணராஜ்சால் என்ற இடத்தில் வாழ்ந்து வந்துள்ளார்.

ஆரம்பத்தில் மெல்பேர்னில் வாழ்ந்த வருணராஜ். சால் பகுதியில் குடியேறிய பின்னர் தனிமையாக உணர்ந்ததாகவும், இதனால் கடும் மனஅழுத்தத்திற்கு ஆளாகியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

# பாடத்திட்டங்களை மாற்றியமைக்க தீர்மானம்- ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

பாடத்திட்டங்களை நவீன முறைக்கேற்ற வகையில் மாற்றியமைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சமூகத்திற்கு ஏற்ற வகையில் பாடத்திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும் என்றும் இந்த விடயம் தொடர்பாக சகல தரப்பினரிடமும் கருத்துக்கள் பெறப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் கல்வி நிறுவனங்களில் இளம் சமூகத்தினருக்கு வழங்கப்படும் கல்விக்கும், தொழில் வாய்ப்புக்களுக்கும் இடையிலான தொடர்பு மிகவும் குறைவு என்றும் சுட்டிக்காட்டினார்.

ஆகையால் இதனை மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மாவட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் சங்கம் ஆகியோருடன் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்களைப் பெற்று பாடத் திட்டங்களை முழுமையாக நவீனமயப்படுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஐவருக்கு கொரோனா

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய நிர்வாகத்தின் கீழுள்ள மாளிகைக்காடு கிழக்கு பகுதியில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 5 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

மேலும் இவர்கள் நடமாடிய பகுதிகளை சுகாதாரத்துறையினர் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை முடக்கி மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் அப்பகுதியில் உள்ளவர்களுக்கு காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய சுகாதார ஊழியர்களினால் பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ஐ)

# சர்வதேசத்திற்கு பதிலளிக்கும் தேவை அரசுக்கு இல்லை

(கொழும்பு)

சர்வதேச சமூகத்திற்கோ அல்லது அமைப்புகளுக்கோ பதிலளிக்கவேண்டிய தேவை இலங்கைக்கு இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இராஜாங்க அமைச்சர் இந்திக அனிருத்த தெரிவிக்கையில்,

இலங்கையில் சர்வாதிகார அரசாங்கம் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு எதிர்க்கட்சி பொய்யான தகவலை வழங்குகின்றது.

இலங்கை அரசாங்கம் தான் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களை பின்பற்றும் அதேவேளை இலங்கையின் இறைமை மிகவும் முக்கியமானது. ஜனாதிபதியும் பிரதமரும் அரசாங்கமும் இது தொடர்பில் ஒரே நிலைப்பாட்டை கொண்டுள்ளனர்.

வெளிநாடுகள் சர்வதேச அமைப்புகளில் தங்கியிருந்த நிலையிலிருந்து இலங்கை விடுபடுவதாகவும் இலங்கை அரசு சர்வதேசத்திற்கோ அல்லது வேறு அமைப்புகளுக்கோ பதிலளிக்க வேண்டிய தேவை எதும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி-7)

# மிலேனியம் சவால்கள் உடன்படிக்கையில் இலங்கையின் பெயரும் உள்ளடக்கம்!

(கொழும்பு)

மிலேனியம் சவால்கள் உடன்படிக்கையில் தொடர்ந்தும் இலங்கை இணைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

வோஷிங்டன் டி.சி.யில் இன்று மிலேனியம் சவால்கள் உடன்படிக்கை தொடர்பான கூட்டம் இடம்பெறுவதாக அமெரிக்க தூதரக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த திட்டத்தை வழங்கும் பட்டியலில் இலங்கை இருப்பதாகவும் எவ்வாறாயினும், கூட்டத்தில் எட்டப்படும் முடிவுகள் குறித்து ஊகிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறுபட்ட சர்ச்சைகளுக்கு மத்தியில் எம்.சி.சி மானியப் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டதாக முன்னதாக, உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள நிதி அமைச்சின் செயலாளர் இலங்கை குறித்த திட்டத்தில் இருந்து நீக்கப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்தினார்.

பொருளாதார வளர்ச்சியின் மூலம் வறுமையைக் குறைக்கும் நோக்கில் 480 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கும் குறித்த ஒப்பந்தத்திற்கு கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எம்.சி.சி.குழு ஒப்புதல் அளித்தது.

இருப்பினும், ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கம் மிலேனியம் சவால்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதை 2019 டிசெம்பரில் நிறுத்தி. எம்.சி.சியை மீளாய்வு செய்ய நான்கு பேர் கொண்ட குழுவை நியமித்தது. அதன்படி குறித்த குழு தனது மீளாய்வு அறிக்கையை இந்த ஆண்டு ஜூன் மாதம் பிரதமர் மற்றும் ஜனாதிபதியிடம் ஒப்படைத்தது. இதனையடுத்து குறித்த அறிக்கை பின்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த ஒக்டோபர் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் போம்பியோ, இலங்கையின் இறையாண்மையை பாதிக்கும் வகையில் மோசமான ஒப்பந்தங்களை எட்டப்போவதில்லை என கூறியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். (நி-7)

# தேங்காயின் விலை ஏற்றத்தினைத் தடுக்க வேண்டுமாயின் தென்னைகளுக்கு உரமிட்டு விளைச்சலைக் கூட்டுவது காலத்தின் தேவையாகும்

## உரமிடல் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைகள் கீழே தரப்பட்டுள்ளன



ஆக்கம்:- ஜெ.சத்தியேந்திரன்
உதவிப்பிராந்திய முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,
பிராந்தியக் காரியாலயம்,
பளை,
கமநல சேவைநிலையம்,
நல்லூர்.


### தென்னைக்கான (NPK) உரக்கலவை

**அடிக்கட்டுப்பசளை:- தென்னங்கன்று, இளம் கன்றுக்கான உரக்கலவைகள்**

| YPM - W | | YPM - D | |
|---|---|---|---|
| ஈர மற்றும் இடைவெப்ப வலயங்களுக்கானது | | உலர் வலயத்திற்கானது | |
| வகை | அளவு | வகை | அளவு |
| யூரியா | 2 பகுதி நிறையில் | யூரியா | 2 பகுதி நிறையில் |
| எப்பாவெல பாறைப் பொசுபேற்று (ERP) | 4.5 பகுதி நிறையில் | இறக்குமதி – பாறை பொசுபேற் (IRP) | 3 பகுதி நிறையில் |
| மியூரியற் ஒவ் பொட்டாசு (MOP) | 2.0 பகுதி நிறையில் | மியூரியற் ஒவ் பொட்டாசு | 2 பகுதி நிறையில் |
| கலவையில் NPK | அடங்கும் வீதம் | கலவையில் NPK | அடங்கும் வீதம் |
| 11%N, 16%$P_2O_5$ | 14% $k_2O$ (11-16-14) | 13%N, 12% $P_2O_5$ | 17%$k_2O$(13-12-17) |

### காய்க்கும் மரங்களுக்கான முதிர் கலவை

| APM - W | | APM - D | |
|---|---|---|---|
| ஈர மற்றும் இடைவெப்ப வலயங்களுக்கானது | | உலர் வலயத்திற்கானது | |
| வகை | அளவு | வகை | அளவு |
| யூரியா | 8 பகுதி நிறையில் | யூரியா | 8 பகுதி நிறையில் |
| எப்பாவெல பாறைப் பொசுபேற்று (ERP) | 9 பகுதி நிறையில் | (ERP) | 6 பகுதி நிறையில் |
| மியூரியற் ஒவ் பொட்டாசு | 16 பகுதி நிறையில் | (MOP) | 16 பகுதி நிறையில் |
| கலவையில் NPK | அடங்கும் வீதம் | கலவையில் NPK | அடங்கும் வீதம் |
| 11%N,8%$P_2O_5$,29%$k_2O$ | (11 - 8 - 29) | 12%N, 6%$P_2O_5$ | 32%$k_2O$(12-6-32) |



### செவ்விளநீர் மரத்திற்கான NPK கலவை

இதற்கு உரக்கலவை 13-12-2 இல் குறிப்பிட்ட அளவினை இடலாம்.

குறிப்பு:-

1) APM உரத்தினைக் காற்றுப்படும் படி வைத்தால் அதிலுள்ள யூரியா பகுதியானது காற்றிலுள்ள ஈரலிப்பினை உறிஞ்சுவதால் உரம் ஈரலிப்பாகின்றது. இதனால் நீண்டகாலம் களஞ்சியப்படுத்த முடியாது.

2) மண் ஈரலிப்பாக இருக்கும் போது தான் APM உரக்கலவை இடுதல் வேண்டும். இதனால் யூரியாவிலிருந்து அமோனியா வாயு வெளியேறுவதனைத் தடுக்கலாம்.

3) தென்னை மரத்திற்கு மகனீசியம் மூலகத்தை வழங்கும் உரமாக டொலமைற் பாவிக்கப்படுகின்றது. இது APM கலவைக்குள் சேரவில்லை. ஏனெனில் யூரியாவினையும் டொலமைற்றினையும் கலந்து களஞ்சியப்படுத்த முடியாது. APM இனையும் டொலமைற்றினையும் தனித்தனியாக ஒரே நேரத்தில் உரவட்டத்தினுள் போட்டு மண்ணுடன் கலந்து விடலாம்.

### உரக்கலவையை பாவிக்கும் அளவு

அடிக்கட்டுப்பசளை (நாட்டும் பொழுது) ஈர மற்றும் இடை வலயங்களுக்கு:-
இளம் கன்றுக் கலவை (YPM - W) 1250 கிராம்
டொலமைற் 1000 கிராம்

உலர் வலயத்துக்கு:-
இளம் கன்றுக் கலவை (YPM - D) 1000 கிராம்
டொலமைற் 1000 கிராம்

மேல் குறிப்பிட்ட இரசாயன உரக்கலவையுடன் 10 கிலோ உலர்ந்த மாட்டெரு / ஆட்டெரு / கோழி எச்சம் சேர்த்து நடுகைக் குழிக்குப் பாவிப்பது நன்மை பயக்கும்.

இளம் கன்றுக்கு பாவிக்கும் அளவு:
இளம் கன்றுக் கலவை YPM - W மற்றும் YPM - D

| | 6 மாதத்திற்கு ஒரு மரத்துக்கான பாவனை வீதம் (கிராமில்) | | |
|---|---|---|---|
| கன்றுகளின் வயது | YPM - W ஈர இடை, வெப்ப வலயங்கள் | YPM - D உலர் வலயம் | டொலமைட் |
| 6 மாதங்கள் | 800 | 650 | 500 |
| 12 மாதங்கள் (1 வருடம்) | 1000 | 800 | 500 |
| 18 மாதங்கள் (1 1/2 வருடம்) | 1000 | 800 | 500 |
| 24 மாதங்கள் (2 வருடம்) | 1300 | 1100 | 500 |
| 30 மாதங்கள் (2 1/2 வருடம்) | 1300 | 1100 | 500 |
| 36 மாதங்கள் (3 வருடம்) | 1600 | 1350 | 500 |
| 42 மாதங்கள் (3 1/2 வருடம்) | 1600 | 1350 | 500 |
| 48 மாதங்கள் (4 வருடத்திலிருந்து காய்க்கும் வரை) | 2000 | 1600 | 500 |

**வளர்ந்த (முதிர்) மரங்களுக்குப் பாவிக்கும் வீதம்**

NPK முதிர் மரக்கலவை APM-W, APM-D மற்றும் டொலமைற்

| வருடத்துக்கு ஒரு மரத்துக்கான பிரயோக வீதங்கள் | | |
|---|---|---|
| APM-W (ஈர மற்றும் இடை வெப்ப வலயங்கள்) | APM-D (உலர் வலயம் டொலமைற்) | |
| 3.3 கிலோ | 3.0 கிலோ | 1 கிலோ |

குறிப்பு:

- வருடத்திற்கு 50-75 தேங்காய்கள் காய்க்கும் தென்னை மரங்களுக்கு மேற்படி சிபாரிசு செய்யப்பட்ட அளவு உரம் பாவிக்கலாம்.
- கலப்பினங்களுக்கும் மேம்படுத்தப்பட்ட அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடிய இனங்களுக்கும் (ஒரு வருடத்திற்கு ஒரு மரத்திற்கு 75 தேங்காய்களுக்கு மேல்) சிபாரிசு செய்யப்பட்ட அளவின் 1 1/2 மடங்கு கூடுதலாக பிரயோகம் செய்தல் வேண்டும்.

### உரம் பாவிக்கும் முறை

| கன்றுகளின் வயது (மாதங்கள்) | பசளை வட்டத்தின் ஆரை (cm இல்) |
|---|---|
| 6 | 30 |
| 12 | 60 |
| 18 | 60 |
| 24 | 90 |
| 30 | 90 |
| 36 | 110 |
| 42 | 110 |
| 48 | 150 |

### இளம் தென்னங்கன்றுகளுக்கு

- சுமார் ஒரு வருடம் வயதுள்ள தென்னங்கன்றுக்கு அடியிலிருந்து ஒரு அடி வரையான நிலப்பரப்பளவினுள் உரத்தினை தூவி மண்ணுடன் சேர்த்தல் வேண்டும்.
- தென்னங்கன்றுகள் வளர்ச்சியடையும் போது உரத்தினைப் பாவிக்கும் வட்டமும் படிப்படியாகக் கூடிச்சென்று மரம் காய்க்க ஆரம்பிக்கும் போது உரவட்டம் மர அடியிலிருந்து 6 அடி சுற்று வட்டப்பரப்பினுள் (முழுவதும்) சிபாரிசு செய்யப்பட்ட உரத்தினை தூவி மண்ணுடன் கலந்து பத்திரக்கலவையினால் மூடிவிடலாம்.

### காய்க்கும் தென்னைகளுக்கு

காய்க்கும் தென்னை மரத்தின் அடியிலிருந்து 6 அடி சுற்று வட்டப்பரப்பினுள் அரை அடி ஆழத்தில் மண்ணைக் கொத்திப் பிரட்டவும். முதிர் மரத்திற்கு **3 Kg APM** உரத்தினை 6 அடி சுற்று வட்டப்பரப்பு முழுவதற்கும் தூவி மண்ணுடன் கலந்து விடவும். பின்பு அந்தப் பரப்பினை பத்திரக் கலவையினால் மூடி விடவும்.

(தொடரும்)

# காரைநகர் பிரதேச சபை

## பொது அறிவித்தல் - 2021

**பின்வரும் அறிவித்தல்கள் 01.01.2021 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.**

**01.பட வரைஞராகப் பதிவு செய்தல்**

2021ம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2021ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை, புதுப்பித்தல்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**02.வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2021**

இப்பிரதேச எல்லைக்குள் நிரந்தர வியாபாரம் செய்வோர், நடமாடும் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை வடக்கு, தெற்கு உப அலுவலகங்களில் 2021ம் ஆண்டு ஜனவரி 20ம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அப்பகுதி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2021ம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை **(Trade License )** பெற்றுக்கொள்ளவும். 31.03.2021ம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**03.சூழல் பாதுகாப்பு உரிமம்** (EPL - **2021)**

இப்பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார / தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை 31.01.2021ற்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெறத் தவறுபவர்கள் 2021ம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வியாபார / தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**04.துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம்**

மேற்படி துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2021.03.31ம் திகதிக்கு முன் அப்பகுதி உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2021ம் ஆண்டிற்கான வாகன, மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**05.வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், அமைத்தலும், புதுப்பித்தல் /திருத்த வேலைகள் செய்தலும்**

5.1 எமது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் மேற்படி அமைப்பு வேலைகளை அனுமதியின்றி மேற்கொள்ளல் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கமைவாக தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரிய விண்ணப்பப்பத்திரங்களை அப்பகுதி உப அலுவலகங்களில் பெற்று சபையின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு முன் அனுமதி பெறப்படாத கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

5.2ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்தில் கட்டட வேலைகள் பூர்த்தியாகாதவிடத்து அவ்விண்ணப்பதாரிகள் அனுமதியினைப் புதுப்பித்துக்கொள்வதோடு கட்டடத்தை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அறியத்தருகின்றேன்.

5.3 சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள், கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதிபெற்று அமைத்தல் வேண்டும் என அறியத்தருகின்றேன்.

5.4 அனுமதியற்ற கட்டடங்களுக்கு பின்வருமாறு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும்.

| தொ. இல | அனுமதியற்று கட்டப்பட்ட கட்டட விபரம் | வதிவிடம் (குடியிருப்பு) ஒரு சதுர மீற்றருக்கு | வர்த்தக மற்றும் ஏனைய தேவைக்கான கட்டடங்கள் ஒரு சதுர மீற்றருக்கு |
|---|---|---|---|
| 01 | அத்திவார வேலை மட்டும் பூர்த்தி (தூண் பீட மட்டம் வரை) | ரூபா 200.00 | ரூபா 500.00 |
| 02 | கூரை மட்டம் வரையிலான நிர்மாணம் (கூரை நீங்கலாக) | ரூபா 300.00 | ரூபா 1,000.00 |
| 03 | கூரை உட்பட நிர்மாணம் | ரூபா 400.00 | ரூபா 1,500.00 |
| 04 | நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டது | ரூபா 500.00 | ரூபா 2,000.00 |
| 05 | எல்லைச்சுவர் (மதில்) / அணைச்சுவர் நிறுவுதல் | ரூபா 400.00 | ரூபா 400.00 |
| 06 | தொலைத் தொடர்பு மற்றும் வானலை வாங்கிக் கோபுரங்களை நிறுவுதல் | உயரத்தில் ஒவ்வொரு 5 மீற்றருக்கும் ரூபா 10,000.00 | |
| 07 | அமைவுச்சான்றிதழைப் பெறாமல் குடியிருத்தல்/பயன்படுத்தல் | நாளொன்றுக்கு 50.00 | |

**06.வீதி ஒழுங்கைப் பேணல்**

6.1 காரைநகர் நகர மையப்பகுதியில் அதிகரித்த போக்குவரத்து காரணமாக, விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களிற்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன்.

**6.2 கனரக வாகனங்களுக்கான வீதிப்போக்குவரத்து நேர அட்டவணை**

காரைநகரில் பாடசாலையினை அண்மித்த வீதிகளில், மாணவர்களின் போக்குவரத்து நலன் கருதி பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திலிருந்து அரை மணித்தியாலங்கள் முன்னராகவும் பாடசாலை முடிவடையும் நேரத்திலிருந்து அரை மணித்தியாலங்கள் பின்னராகவுமே கனரக வாகனங்கள் பயணிக்கலாம் எனவும் அல்லது குறித்த இடத்தில் கனரக வாகனங்கள் நிறுத்தப்பட்டு பின்னரே பயணிக்கலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

**07.விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

இப்பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இரு மருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் / காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை 31.01.2021ம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 31.03.2021ம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

கட்டண விபரம் பின்வருமாறு.

| | | 3 மாதம் ரூபா.சதம் | 12 மாதம் ரூபா.சதம் |
|---|---|---|---|
| 01.கொடி விளம்பரம் | 1 சதுர அடி | 10.00 | 40.00 |
| 02.ஒளியூட்டப்பட்ட விளம்பரங்கள் | 1 சதுர அடி | - | 100.00 |
| 03.ஒளியூட்டப்படாத விளம்பரங்கள் | 1 சதுர அடி | - | 50.00 |
| 04.சுவர்களில் அமைக்கப்பட்ட விளம்பரம் | 1 சதுர அடி | - | 50.00 |

**08.பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

காரைநகர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருட்களை அனுமதியின்றி கொண்டுசெல்லுதல், கொட்டுதல் ஆகியன பொதுச்சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேசசபைச் சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**09.அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள், காணிகள் தொடர்பான அறிவித்தல்**

அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்பட வேண்டும். தவறின் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**10.உணவு கையாளும் நிலையங்கள் தொடர்பான அறிவித்தல்**

உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**11.தரகர் முறை நீக்கல்**

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர்.

**12. நீர் வழங்கல் சேவை**

பொது மக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்விற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**13. உழவியந்திரம் , உருளை , பக்கோ சேவை**

பொது மக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது தேவையின் பொருட்டு உருளை, பக்கோ சேவையினைப் பெறுவதற்கு பிரதேச சபையின் உப அலுவலகங்களில் கட்டணங்களை செலுத்தி சேவையினை பெற்றுக் கொள்ளலாம் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**14. கட்டாக்காலி கால்நடைகள் (ஆடு,மாடு)**

பொது மக்கள் தமது கால்நடைகளை கட்டி வைத்து வளர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மீறும் சந்தர்ப்பத்தில் பிரதேச சபையால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில் செய்வோர் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. விஜயதர்மா கேதீஸ்வரதாஸ்,**
**தவிசாளர்,**
**பிரதேசசபை, காரைநகர்.**

(C-913)

# வீதியில் விடும் நாய்க்குட்டிகளை காப்பகத்தில் விடுங்கள்

## நகரசபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

வீதியோரங்கள் சந்தைகள், ஆலயங்கள் எனப் பல பொது இடங்களிலும் நாய்க்குட்டிகளை கொண்டு வந்து விட்டு விட்டுச் செல்கின்ற நிலைமை அண்மையில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

எனவே பெண் நாய்களை வளர்க்கும் போது அவற்றுக்கு கருத்தடை செய்து வளர்க்க பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திருமதி பவுலினா சுபோதினி தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். அவர் கருத்து தெரிவிக்கையில்,

வீதியோரங்களில் விடப்படும் நாய்க்குட்டிகள் உணவின்றியும்,விபத்தில் சிக்கியும் இறந்து போகின்றன.அத்துடன் விபத்துக்கள் ஏற்படவும் காரணமாக இருக்கின்றன. இவ்வாறு பொது இடங்களில் அநாதரவாக திரியும் நாய்க்குட்டிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கில் அவற்றைப் பிடித்து இயக்கச்சியில் உள்ள நாய்களுக்கான காப்பகத்தில் விட நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் பெண் நாய்களை வளர்ப்பவர்களுக்கு அவற்றுக்கு கருத்தடை செய்து வளர்ப்பதற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும். எனவும் அவர் தெரிவித்தார். (5-4-30)

# பழுதடைந்த தெருமின் விளக்குகளை மாற்றக் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த நிலையில் காணப்படும் தெருமின் விளக்குகளை உடனடியாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது மாரிகாலம் என்பதனால் பொதுமக்களின் நலன்கருதி மின்சாரசபையினர் உடனடியாக பழுதடைந்த தெருவிளக்குகளை திருத்துவதற்கு நகரசபைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தெரு விளக்குகள் ஒளிராமையால் விபத்து மற்றும் களவு போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

எனவே பொதுமக்களின் நலன்கருதி சாவகச்சேரி நகரசபை இவ் விடயங்களில் அதிக கவனம் செலுத்தி குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்ய வேண்டும் என தெரிவித்தார். (5-4-30)



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 1989ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர வகுப்பு மாணவ அணியினர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மீசாலை, கொடிகாமம் மற்றும் மறவன்புலோ மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை அண்மையில் வழங்கினர். (படம்-சுபேசன்)

# உரும்பிராய் சந்தையும் முடக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பிரதேச சபை முன்னெச்சரிக்கை நோக்கில் பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கோரிக்கைக்கு அமைய உடன் அமுலுக்கு வரும் வகையில் உரும்பிராய் பொதுச்சந்தை தற்காலிகமாக மூடப்படுவதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே கொரோனா நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டவரிடம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் உரும்பிராய் பொதுச் சந்தையில் நடமாடியதைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் சுகாதார ஆலோசனை பெறப்பட்டு மீளத் திறப்பது தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை த்தவிசாளர் தெரிவித்துள்ளார். (5-4)



புரேவிப் புயல் காரணமாக பாதிக்கப்பட்ட பொற்பதி, குடத்தனை கிராமங்களைச் சேர்ந்த 88 குடும்பங்களுக்கு புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் தொழிலதிபர் அரியதாஸ் செல்வதாஸ் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளார். கிராம அலுவலர் எஸ்.சுயேந்தினி தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலாளர் கு. பிரபாகரமூர்த்தி, பங்குத்தந்தை ஆபிரகாம் ஸ்கரன்ராஜ், அருட்தந்தை தேவரத்தினம் செல்வரட்ணம், தொழிலதிபர் செல்வதாஸின் தந்தை றப்பியல் அரியதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்-மகாலிங்கம்)

# முதியவரைக் காணவில்லை

(குப்பிழான்)

உரும்பிராய் மேற்கு அன்னாங்கையைச் சேர்ந்த 75 வயது முதியவரை மூன்று நாட்களாக காணவில்லை.

இது தொடர்பில் அவரது உறவினர்களால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்றுத் திங்கட்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (5-4-18)

# முகக் கவசம் அணியாதவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கைதடிப் பகுதியில் முகக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் நேற்று சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதடிப் பகுதியில் கொரோனா தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்டுள்ள நிலையில் அப் பகுதியில் முகக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரையே பொலிஸார் துரத்திச் சென்று கைது செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.(5-30)

# இறைச்சியுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

பூநகரி-சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகாமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 230 கிலோகிராம் மாட்டிறைச்சியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சிப் பகுதியில் இருந்து சாவகச்சேரிப் பகுதி நோக்கி பட்டா ரக வாகனத்தில் மாட்டிறைச்சி கொண்டு வந்த போது வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த இராணுவம் மற்றும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அத்துடன் இறைச்சியும் கைப்பற்றப்பட்டது. வாகனச் சாரதியான புத்தளவாசியிடம் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-30)

# கரவெட்டியில் வீடுகள் கையளிப்பு



(கரணவாய்)

கிராமத்திற்கு ஒரு வீட்டுத் திட்டத்தின் கீழ் கரவெட்டி பிரதேசத்திற்குட்பட்ட 5 கிராமங்களில் 5 வீடுகள் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன. இவ் வீடுகள் வழங்கும் நிகழ்வில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வீடுகளைக் கையளித்தார். (5-4-60)

# மகளிர் அபிவிருத்தி நிலைய பயிற்சி நெறி- 2021

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் ஊடாக நடத்தப்படும் ஊர்காவற்றுறை பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான மனைப் பொருளியல் டிப்ளோமா கற்கை நெறியுடன் இணைந்த ஆடை வடிவமைத்தலுக்கான தொழில் முறைமை கற்கை நெறி (NVQ-Level-4) 01.01.2021 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் க.பொ.த.(சா/த) வரை கல்வி கற்ற ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 18 தொடக்கம் 35 வயதிற்குட்பட்ட பெண்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஊர்காவற்றுறை பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று குறித்த பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியுமென ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் அறிவித்துள்ளார். (5)

# மாலைதீவின் கோரிக்கை பரிசீலனை

(கொழும்பு)

கொரோனாத் தொற்றாளர்களின் சடலங்களைப் புதைப்பது குறித்து மாலைதீவு விடுத்துள்ள கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான சுகாதார சாத்தியப்பாடுகளை ஆராயுமாறு சுகாதார அமைச்சுக்கு இலங்கை வெறியுறவுத்துறை அமைச்சு வலியுறுத்தியுள்ளது.


மாலைதீவிலுள்ள தீவொன்றில் சடலங்களைப் புதைப்பதற்கு இடம் வழங்கவுள்ளதாக அந்த நாட்டு அரசாங்கம் இலங்கைக்கு அறிவித்திருந்தது.

இது தொடர்பில் சுகாதார வழிமுறைகளின் பிரகாரம் பதிலளிப்பதற்கான அறிக்கையொன்றை சுகாதார அமைச்சு தயாரித்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சு கூறுகின்றது.

அத்துடன் நீர் மட்டம் குறைந்த வறண்ட நிலப்பரப்பொன்றை கண்டறியுமாறு பிரதமர் விடுத்த கோரிக்கை தொடர்பில் நிபுணர்கள் தற்போது கவனம் செலுத்தியுள்ளனர்.

இதேவேளை ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதற்கு எதிராக வெள்ளைத் துணிகளைக் கட்டி பொரளை பொது மயானத்திற்கு அருகில் பலர் எதிர்ப்பினை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சோளப்பயிர்ச் செய்கையை அழிக்கும் படைப்புழுக்கள்



(திருமலை)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சோளப் பயிர்ச் செய்கையில் படைப்புழுக்களின் தாக்கம் அதிகரித்துள்ளதாக சோளத் தோட்ட செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.


இப்படைப்புழுவின் தாக்கம் காரணமாக சோள உற்பத்தியில் அழிவுகள் ஏற்படுவதுடன் விளைச்சலிலும் பாரிய வீழ்ச்சி ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தம்பலகாமம், சிராஜ் நகர், முள்ளிப்பொத்தாணை உட்பட பல பகுதிகளிலும் இதன் தாக்கம் ஏற்பட்டுள்ளதுடன், இதனால் பயிர்ச்செய்கையாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கிண்ணியா, குச்சவெளி, வெருகல் உட்பட பல பகுதிகளிலும் பல ஏக்கர் நிலங்களில் சோளம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற போதிலும் படைப்புழுத்தாக்கம் செலுத்தி அழிவுகளை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலும் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி இது தொடர்பில் சாதகமான முடிவுகளை தருமாறு சோள செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# 122 கைதிகளுக்கு தொற்று



(கொழும்பு)

மேலும் 122 கைதிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 3087 ஆக உயர்ந்துள்ளது.

இவர்களில் 103 சிறைச்சாலை அதிகாரிகள் அடங்குவதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் நேற்று திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

மேலும் புதிதாக அடையாளம் காணப்பட்ட 122 கைதிகளில் 120 ஆண் கைதிகள் என்றும் மற்ற 2 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# பண்டிகைக்கால கொண்டாட்டங்களை குடும்ப உறுப்பினர்களுடன் கொண்டாடுங்கள்

(கொழும்பு)

அதிக மக்கள் கூட்டத்தை ஈர்க்கும் அனைத்து புத்தாண்டு மற்றும் கிறிஸ்மஸ் விருந்துபசார நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மேலும் இந்தக் காலத்தில் கொரோனாத் தொற்று பரவாமல் கட்டுப்படுத்த தனிமைப்படுத்தல் சட்டங்களை கடைப்பிடிக்க பொதுமக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். அத்துடன் பண்டிகைக் காலங்களில் கொண்டாட்டங்களை தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்குள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், பண்டிகைக் காலங்களில் சிறப்புப் போக்குவரத்துத் திட்டம் செயற்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)


மணிவிழா வாழ்த்துகள்

15.12.2020

திருமதி. ஜெகநாதன் தவமலர்

மனைப்பொருளியல் பயிற்றப்பட்ட ஆசிரியர்,
சேவை நிலையம்:- யா/ ஸ்ரீ புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி







அன்பும் கருணையும் நிறைந்த உள்ளம் என்றும் இனிய எங்கள் அறிவு வெள்ளம்
மன்சீர் மனைப் பொருளியல் அவரிடம் துள்ளும் மாண்பு நலன் மாட்சிமை அவரை அள்ளும்
நன்றுற விளங்கும் நல்லாள் ஜெகநாதன் தவமலர் நின்றுற துலங்கும் நலன்மேவு நுவரேலியா
லபுகல தமிழ் வித்தியாலயத்தில் கல்வி நல்கி தன்னிக ரில்லா நானுஓயா வித்தியாலயத்தில்
தெள்ளிய சேவையாற்றி வேலணை மேற்கு நடராஜாவில்
இன்னுற விளங்கி புத்தூர் நல் ஸ்ரீ சோமாஸ்கந்தாவில்
எண்ணில்லா பெரும்பணி செய்த ஈடில்லா உன் புகழ் என்றும்
நிற்கும் இனிதுற பெருகும் நெடுநல்
பொன்னுரு கேணிக் குளம் பதி லிங்க விநாயகர்
இனிதுற அருள பெருமகள் குலக்கொடி வாழிய நலனே.

(C-911)

ஓய்வுக்காலம் சிறக்க அன்புடன் வாழ்த்துவோர்:
அன்புக் கணவர், அம்மா, சகோதரர்கள், பிள்ளைகள், பெறாமக்கள், மருமக்கள்.


# யாழ்ப்பாணம் மாநகர சபை

## 2021 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன் பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் கௌரவ திரு.இம்மானுவல் ஆனல்ட் ஆகிய நான் யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230 (1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு 2021 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறாக இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். அதாவது,

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2020 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு / மதிப்பீட்டை 2021 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு / மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும் மேற்படி விலை மதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 230 (1)ம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனங்களின் நிலங்கள், வதிவிடங்கள் என்பவற்றுக்கு வருடாந்த பெறுமதியில் 8% சதவீதமாகவும், வர்த்தக நிலையங்களுக்கு வருடாந்த பெறுமதியில் 10% சதவீதமாகவும் விதிக்கப்படல் வேண்டும் என்றும்,

மேலும், 2021 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாண மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின் வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும் மேற்படி அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித்தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் 5% ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாத விடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% திலுமான (பதினைந்து வீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% திலுமான (இருபது வீதம்) விறாந்துச் செலவு அறவிடப்படும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

(C-906)


கௌரவ இம்மானுவல் ஆனல்ட், முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.

மேற்படி அட்டவணை

| காலாண்டு | செலுத்த வேண்டிய திகதி | 5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 01.01.2021-31.03.2021 | 31.01.2021 |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2021-30.06.2021 | 30.04.2021 |
| மூன்றாவது காலாண்டு | 01.07.2021-30.09.2021 | 31.07.2021 |
| நான்காவது காலாண்டு | 01.10.2021-31.12.2021 | 31.10.2021 |

# கிளி.சேவைச் சந்தையில் வெளிமாவட்டத்தவர்களுக்கு

## பி.சி.ஆர். பரிசோதனை




(முறிகண்டி)

கிளிநொச்சி சேவைச் சந்தைக்கு வருகை தரும் வெளி மாவட்ட சாரதிகள் மற்றும் சந்தை வியாபாரிகளிடமிருந்து பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டுள் ளன.


வெளி மாவட்டத்திலிருந்து வருகை தந்த சாரதிகளிற்கும், கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர்கள் உள்ளிட்ட 45 பேரிடமிருந்து குறித்த மாதிரிகள் நேற்று பெறப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பின்னர் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரால் குறித்த மாதிரிகள் பெறப்பட்டமையும் கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (5-4-100)



"தாய் நிலம்" அறக்கட்டளையின் அனு சரணையில் பசியில்லா மன்னார் அமைப்பின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று முன் தினம் நானாட்டான் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. குறித்த இரத்ததான நிகழ்வானது பசியில்லா மன்னார் அமைப்பின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலக பிரிவுக ளிலும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்:-ஜோசப்நயன்)

# காசோலைகள் வழங்கி வைப்பு



(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் வீட்டு லொத்தர் கொடுப்பனவிற்கு குழுக்கல் முறையில் தெரிவான சமுர்த்திப் பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் மற்றும் சமுர்த்தி திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு தெரிவான முப்பது அதிர்ஷ்டசாலிகளுக்கான தலா இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோர்லைகளை வழங்கி வைத்தனர். (5-30)

# சாளம்பைக் குளத்தில் மேலும் மூவருக்கு தொற்று

(நெளுக்குளம்)

புதிய சாளம்பைக்குளம் பகுதியில் கொரோனா தொற்றாளர்கள் இருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் மேலும் மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கொழும்பில் இருந்து வவுனியா திரும்பிய தாயும், மகளும் சாளம்பைக் குளத்தில் அமைந்துள்ள அவர்களது வீட்டில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களிற்கான பி.சி.ஆர் பரிசோதனையில் இருவருக்கும் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த இருவரது இருப்பிடமான வவுனியா புதிய சாளம்பைக்குளம் பகுதி நேற்று முன்தினம் காலை முதல் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவர்களுடன் தொடர்பை பேணியவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதன் முடிவுகளின் பிரகாரம் 3 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டு ள்ளது.

இந்நிலையில் புதிய சாளம்பைக்குளம் பகுதியின் முடக்க நிலை நீடிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பகுதியில் அமைந்துள்ள அல் அக்சா பாடசாலையின் கல்விச்செயற்பாடுகள் எதிர் வரும் 16 ஆம் திகதி வரைக்கும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

(5-4-299)

# விளக்கமறியல் கைதிக்கு தொற்று உறுதி

(நெளுக்குளம்)

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்த கைதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த குறித்த நபருக்கு கடந்த 12ஆம் திகதி பி.சி. ஆர். பரிசோதனை மேற் கொள்வதற்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் பரிசோதனைக்கான முடிவுகள் கிடைக்கப்பெற்றன.

அதன்படி அவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள் ளமை உறுதியாகியுள்ளது. அதனையடுத்து தொற்றுக்குள்ளானவர் கந்தகாடு முகாமிற்கு அனுப்பி வைக்கப்படடுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(5-4-299)



நெல்லியடிப் பொலிஸாரால் கொரோனா விழிப்புணர்வுச் செயற்பாடு நேற்று முன்தினம் அப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. (படம்:- மகாலிங்கம்)

# நியமனம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் இடமாற்றம் பெற்றுச் சென்ற நிலையில் புதிய பணிப்பாளராக வைத்தியர் த.காண்டீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளராகவும், மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் கடமையாற்றிய வைத்தியர் த. காண்டீபன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(5-4-250)

# வெடிபொருள் இருப்பதாக அகழப்பட்ட பகுதியில் கழிவுப்பொருட்களே

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட தருமபுரம் 3ஆம் வீதீயில் உள்ள கைவிடப்பட்ட காணியொன்றில் வெடிபொருட்கள் இருப்பதாக கூறிய இடத்தில் சந்தேகத்திற்கு இடமான வகையில் இருவர் நடமாடியதையடுத்து சம்பவ இடத்திற்கு இராணுவத்தினர் வந்த போது இருவரும் தப்பிச்சென்றுள்ளனர் .

இராணுவத்தினர் சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றின் அனுமதியுடன் நேற்று முன்தினம் இராணுவத்தினர் மற்றும் தருமபுரம் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து அகழ்வுப் பணிகளை கிளிநொச்சி மாவட்ட நீதவான் முன்னிலையில் மேற்கொண்டனர்.



அகழ்வின்போது எந்த வித வெடிபொருட்களும் காணப்படவில்லை.

வேறு கழிவுப் பொருட்களே காணப்பட்டன. எனவே அகழ்வுப் பணி நிறுத்தப்பட்டது. 5-4-316)

# இராசிபலன்

15.12.2020
கார்த்திகை 30, செவ்வாய்க்கிழமை
பிரதமை முன்னிரவு 8.57 மணிவரை
மூலம் முன்னிரவு 11.37 மணிவரை
சுபநேரம் 10-51-12.21 மணிவரை
இராகுகாலம் 3.21-4.51 மணிவரை
சந்திராஷ்டமம்: கார்த்திகை,ரோகிணி
அமிர்த சித்தம் வளவன்


மேஷம்

வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம்.


ரிஷபம்

குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், அல்லல்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், உடல் நலன் பற்றிய கவலை உருவாகும்.


மிதுனம்

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருளான்றை வாங்கி மகிழ்வீர்கள், விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.


கடகம்

பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், காரிய அனுகூலமுண்டு.


சிம்மம்

எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.


கன்னி

இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும் நாள், கடன் சுமை குறையும் நாள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


துலாம்

நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், தேகநலனில் அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


விருச்சிகம்

நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.


தனுசு

சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, எதிர்பாராத காரியமொன்று நடைபெற்று இன்பம் கூடும்.


மகரம்

குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.


கும்பம்

குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மீனம்

தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், காரிய அனுகூலமுண்டு.

குறுகிய மனித வாழ்வில் காலத்தை வீணாக்காதே..

# இரு குழுக்கள் மோதல் எட்டுப் பேர் காயம்

(கேகாலை)

கேகாலை, கோலிந்தவத்த பகுதியில் இரு குழுக்கள் இடையில் ஏற்பட்ட மோதலில் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

பெண் ஒருவர் உட்பட 8 பேர் காயமடைந்துள்ளதுடன் அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருகுழுக்களுக்கிடையில் பல நாட்களாக இருந்த பிரச்சினையின் காரணமாக இந்த மோதல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# போதைப்பொருள் வர்த்தகர்கள் தொடர்பில் விசாரணை



(கொழும்பு)

டுபாயிலிருந்து செயற்படும் போதைப்பொருள் வர்த்தகர்கள் தொடர்பில் விசேட விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

டுபாயிலிருந்து வழிநடத்தப்படும் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு பெண்ணும் அடங்கியுள்ளார்.

இவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

களனி பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அவர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் சந்தேக நபர்களின் வங்கிக் கணக்குகள் இணைய வழி மூலமான பணப்பரிமாறல் மற்றும் நிதி கொடுக்கல்-வாங்கல் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் கூறினார். (ஜ)

# 100 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா தொற்று காரணமாக நாட்டிற்கு வர முடியாமல் வெளிநாடுகளில் சிக்கியிருந்த 100 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

சிங்கப்பூரில் இருந்து 8 பேர், சவுதி அரேபியாவில் இருந்து 50 பேர் மற்றும் டோஹாவில் இருந்து 42 பேர் இவ்வாறு வருகை தந்துள்ளனர்.

இவ்வாறு வருகை தந்தவர்கள் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ஜ)

# கச்சான் விற்றவர் தனிமையில்

(அட்டளுகம)

அட்டளுகம பிரதேசத்திலிருந்து தப்பி வந்து, பாணந்துறை பஸ் நிலையத்தில் கச்சான் விற்ற நபர் ஒருவர், இராணுவப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி குறித்த நபர் கைது செய்யப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைகளின் பின்னர், இவரைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை பாணந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர் அட்டளுகம-ஜய கொடிகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஜ)

# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் பொறுப்பேற்பு

(கொழும்பு)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.


பத்தரமுல்லயில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் நேற்று அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் பேராசிரியர் சரத் வீரசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(ஜ)



# தொழில் வாய்ப்புக்கான கதவுகளைத் திறக்கும் திட்டம்

(கொழும்பு)




நாடு முழுவதும் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர்,யுவதிகளுக்கு அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில்வாய்ப்பு பெறும் வாய்ப்பிற்கு அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்கும் "இளைஞர்களுக்கு தொழிலுக்கான கதவுகளை திறக்கும் திட்டத்தை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்க இருப்பதாக கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இதன் முதலாவது நிகழ்வு பத்தரமுல்லை அப்பே கமவில் ஆரம்பிக்கப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் விமல் வீரவன்ச, தொழில் எதிர்பார்ப்புடன் இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் சந்தர்ப்பங்கள் தொடர்பில் வழிகாட்டி அவர்களது விருப்பத்திற்கமைவாக உகந்த தொழிலை பெறச் சந்தர்ப்பம் வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இதன் முதற்கட்டமே இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# இசைக்கச்சேரியில் துப்பாக்கிச்சூடு அமெரிக்காவில் பரபரப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கிறிஸ்மஸ் இசைக்கச்சேரியில் துப்பாக்கிச்சூடு நடத்திய மர்மநபர் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தி அவரை கைது செய்தனர்.

அமெரிக்காவில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் இப்போதே களை கட்ட தொடங்கி விட்டது.

இந்நிலையில், நியூயோர்க் நகரில் உள்ள பிரபல தேவாலயம் அருகே கிறிஸ்துமஸ் இசைக்கச்சேரி நடந்து கொண்டிருந்தது. அப்போது அங்கு நுழைந்த மர்ம நபர் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்த தொடங்கினார்.

உடனே அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸார் அந்த நபர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் மர்ம நபர் காயம் அடைந்தார். உடனடியாக அவரை கைது செய்த பொலிஸார் துப்பாக்கிசூடு நடத்தியது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

கிறிஸ்மஸ் இசைக்கச்சேரியில் மர்ம நபர் துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# பயங்கரவாதத் தாக்குதல்களால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடு ஆப்கானிஸ்தான்



(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாடு பூமியில் பயங்கரவாத தாக்குதல்களால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக உள்ளது என பொருளாதாரம் மற்றும் அமைதி அமைப்பு வெளியிட்டுள்ள தனது வருடாந்த உலக பயங்கரவாத குறியீடு பற்றிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டில் உலகில் நடந்த கடுமையான 20 பயங்கரவாத தாக்குதல்களில் 6 அந்நாட்டில் நடந்துள்ளன என அந்த அறிக்கை தெரிவிக்கிறது. (நி)

# பயங்கரவாதிகளின் தாக்குதலில் நைஜரில் 27 பேர் உயிரிழப்பு

(நைஜர்)

நைஜரின் தென் கிழக்கு பகுதியில் போகோஹறாம் பயங்கரவாதிகள் குறைந்தது 27 பேரை கொலை செய்ததாக அந்நாட்டு ஊடகங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளன.

நைஜரின் டிஃபா பிராந்தியத்தில் உள்ள டூமூர் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆயுத மேந்திய குழு தாக்குதலை மேற்கொண்டதாக கூறப்படுகிறது.

இந்த தாக்குதல்களின் விளைவாக சுமார் 800 வீடுகளும் பணியிடங்களும் அழிக்கப்பட்டுள்ளன. (நி)

# ஸ்மார்ட் போன் மூலம் கொரோனா பரிசோதனை



(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் பெருந்தொற்றினை கண்டறிகிற உமிழ்நீர் அடிப்படையிலான ஸ்மார்ட் போன் பரிசோதனையை மருத்துவ கல்லூரி விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றினை 15 நிமிடங்களில் கண்டறிகிற உமிழ்நீர் அடிப்படையிலான ஸ்மார்ட் போன்பரிசோதனையை அமெரிக்காவில் உள்ள துலேன் பல்கலைக்கழக மருத்துவ கல்லூரி விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

வழக்கமாக கொரோனா பரிசோதனைக்கு தொண்டை அல்லது மூக்கு சளி மாதிரி சேகரிக்கப்படு கிறது. இதில் உமிழ்நீர் தான் சேகரிக்கப்படுகிறது.

ஆரம்ப நோய்த் தொற்றின் போது, உமிழ்நீரில் கொரோனா வைரஸ் இருக்கும்.


இந்த பரிசோதனைக்காக ஒரு சிப்பை உருவாக்கி உள்ளோம்.

இது சி.ஆர்.ஐ. எஸ்.பி. ஆர்.ஃகேஸ் 12 ஏ மூலக்கூறுகளை பயன்படுத்துகிறது. இந்த சிப், ஸ்மார்ட் போன் அடிப்படையிலான புளோரசன்ஸ் மைக்ரோஸ்கோப்பில் இணைக்கப்படுகிறது.

அதன்மூலம் உமிழ்நீர் மாதிரியில் உள்ள வைரஸ் மரபணு பொருளை சிறப்பாக கண்டறியலாம், 15 நிமிடங்களில் கொரோனா தொற்றை கண்டறிந்து விடலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (நி)

# என்னால் வக்கீலுக்கு பணம் கொடுக்க முடியவில்லை

## நீதிமன்றத்தில் விஜய் மல்லையா



(லண்டன்)

திவால் நோட்டீஸ் தொடர்பான வழக்குகளை கவனிக்கும் லண்டன் நீதிமன்றில் வக்கீல் பணம் கூட கொடுக்க முடியாமல் தவிப்பதாக விஜய் மல்லையா மனு தாக்கல் செய்துள்ளார்.

கர்நாடக தொழில் அதிபர் விஜய் மல்லையா வங்கியில் ரூ.13 ஆயிரம் கோடி கடன் மோசடி செய்து விட்டு லண்டன் தப்பி ஓடினார்.

அவரிடம் இருந்து பணத்தை மீட்பதற்கு மத்திய அரசு நடவடிக்கைகளை எடுத்தது. அதன் அடிப்படையில் இங்கிலாந்து நீதிமன்றில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. மேலும் இங்கிலாந்து அரசும் அவர் மீது பல நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

அவர் திவாலாகிவிட்டதாக மஞ்சள் நோட்டீசும் கொடுத்துள்ளார். இதனால் சட்ட ரீதியாக அவருடைய சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் விஜய் மல்லையா திவால் நோட்டீஸ் தொடர்பான வழக்குகளைக் கவனிக்கும் லண்டன் நீதிமன்றில் ஒரு மனு தாக்கல் செய்துள்ளார். அதில், 'சொத்துக்கள் முடக்கப்பட்டு இருப்பதால் அன்றாட செலவுக்குக்கூட என்னிடம் பணம் இல்லை. இந்தியாவிலும், இங்கிலாந்திலும் நடத்தி வரும் வழக்குகளுக்கு வக்கீலுக்கு கொடுப்பதற்கு கூட என்னிடம் பணம் இல்லை.

எனவே பிரான்ஸ் நாட்டில் உள்ள சொத்தை விற்பதற்கு அனுமதிக்க வேண்டும்' என்று கேட்டுள்ளார். மேலும் அவர் மனுவில், 'எனது வழக்குகளை நடத்துவதற்கு மாதம் ரூ.22 இலட்சம் செலவாகிறது. மற்ற செலவுகளும் இருக்கின்றன. அந்த வகையில் எனக்கு ரூ.14 கோடி தேவைப்படுகிறது.

எனவே முடக்கப்பட்ட சொத்தை விடுவித்து தர வேண்டும். இதன் அடிப்படையில் பிரான்ஸ் நாட்டு சொத்தை விற்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

இந்த மனுவை விஜய் மல்லையாவின் வக்கீல் பிலிப் மார்ஷல் நீதிமன்றில் தாக்கல் செய்தார். அப்போது அவர் கூறும்போது, 'விஜய் மல்லையா வழக்குகளுக்காக வாதாடி வரும் எனக்கு கூட பல மாதங்களாக பணம் தரவில்லை.

எனவே நான் அவருடைய வழக்குகளில் இருந்து விலகப் போகிறேன். உடனடியாக சொத்தை விற்பதற்கு அனுமதிக்க வேண்டும்' என்று தெரிவித்தார். (நி)

# கொரோனா தடுப்பூசிக்கு முன்பும் பின்பும் மது அருந்தக்கூடாது

## ரஷ்ய நிபுணர் சொல்கிறார்



(மொஸ்கோ)

கொரோனா தடுப்பூசி போடுவதற்கு 2 வாரங்களுக்கு முன்பும், தடுப்பூசி போட்ட 42 நாட்கள் வரையிலும் மதுபானம் அருந்தக் கூடாது என்று ரஷ்ய நிபுணர் தெரிவித்தார்.

ரஷ்யா தான் தயாரித்துள்ள முதல் கொரோனா தடுப்பூசியான 'ஸ்புட்னிக்' ஐ மக்களுக்கு செலுத்த தொடங்கியுள்ளது.


முதல்கட்டமாக, மருத்துவ ஊழியர்கள், சமூக பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இத்தடுப்பூசி போடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், மதுபானம் அருந்துவது கொரோனாத் தடுப்பு மருந்தை பாதிக்கும் என்பதால், தடுப்பூசி போடுவதற்கு 2 வாரங்களுக்கு முன்பும், தடுப்பூசி போட்ட 42 நாட்கள் வரையிலும் மதுபானம் அருந்தக் கூடாது என்று ரஷ்ய பொது சுகாதாரக் கண்காணிப்பு அமைப்பு ஒன்றின் தலைவரான அன்னா போபோவா தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி போட்ட பிறகு உடம்பில் எதிர்ப்புச்சக்தி உருவாவதை மதுபானம் பாதிக்கும் என்பதால், குறிப்பிட்ட காலம் வரை மது அருந்துவதை தவிர்க்க வேண்டும் என்றார் அவர். (நி)

# கொரோனா ஆபத்து சூழலில் மாகாண சபைத்தேர்தல் எதற்கு?

## தேரர் கேள்வி



(கொழும்பு)

கொரோனா வைரஸ் காரணமாக இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் பெருந்துயரம் மற்றும் நெருக்கடிகளின் மத்தியில் வாழ்கின்றனர் என சுட்டிக் காட்டியுள்ள எல்லே குணவன்ச தேரர், இந்த தருணத்தில் தேர்தல்களை நடத்துவது அரச முதலீட்டை வீணடிக்கும் மற்றுமொரு செயலாக அமையும் என தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் ஆபத்து நிலவுகின்ற சூழலில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்வது குறித்து கண்டனம் வெளியிட்டுள்ள அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது மக்கள் கேட்கும் தேர்தல் இல்லை என தெரிவித்துள்ள அவர், மக்கள் நிராகரித்துள்ள மாகாணசபைக்கான தேர்தல்களை நடத்துவது அரசாங்கத்திற்கு விசுவாசமானவர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கான முயற்சியாக அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மக்கள் கூட தேர்தலை நடத்துமாறு கோரவில்லை என குறிப்பிட்டுள்ள அவர், மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் ஆர்வம் காட்டுவது ஏன் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். (ஜ)

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 12 செம்மணி வீதி ஆதன இலக்கம் 97 என்ற ஆதன இலக்கத்தைக்கொண்ட ஆதனம் J.M.அந்தோனிப்பிள்ளை கைம்பெண் யோசெப் தங்கரத்தினம் என ஆதன வரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

74/1 கோவில் தெரு கொழும்பு 02 என்னும் முகவரியைச் சேர்ந்த முருகேசு மரியாம்பிள்ளை சிவராஜா கைம்பெண் றீற்றா சவுந்திரவதி பிரசித்த நொத்தாரிசு செல்லத்துரை ஜெயரட்ணம் அவர்கள் முகதாவில் 1999 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 18 ஆம் திகதி தன்னுடைய தாயாரான யோசெப்மனுவல் அந்தோனிப்பிள்ளை கைம்பெண் யோசப்பின் தங்கரத்தினம் அந்தோனிப்பிள்ளையினுடைய சொந்தமும் உரித்தும் உடைய ஆதனமாக இருந்து தனக்கு உரித்து வந்தடைந்த ஆதனமென வெளிப்படுத்தி 30ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியை நிறைவேற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தை 74/1 கோவில் தெரு கொழும்பு 02 என்னும் முகவரியைக் கொண்ட முருகேசு மரியாம்பிள்ளை சிவராஜா கைம்பெண் றீற்றா சவுந்திரவதி பிரசித்த நொத்தாரிசு செல்லத்துரை ஜெயரட்ணம் அவர்கள் முகதாவில் 61 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய 06.01.2013ம் திகதியிடப்பட்ட நன்கொடை உறுதி மூலம் தனது மகள் பிலிப் வசந்தராஜனும் பெண் றூபகாந்திக்கும் நன்கொடையாக வழங்கி ஆட்சியை ஒப்படைத்துள்ளார்.

குறித்த மரினா ரூபகாந்தி வசந்தராஜன் பிரசித்த நொத்தாரிசு ரட்ணம் ரகுராஜ் முகதாவில் 09.12.2011ம் திகதி 3652 இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதியூடாக சங்கீதா பத்மினி நந்தகுமாருக்கு நில. பர. 3 குளி 2 இனை நன்கொடையாக அளித்துள்ளமையால் இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் மிகுதி ஆதனத்திற்கு மரினா ரூபகாந்தி வசந்தராஜன் உரிமை கோருகின்றார்.

ஆதன விபரம்- வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை றீற்றா கல்லூரி வளவு நில. பர 08 குளி 04.06 என்னும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S. கனகசபை 19.06.2017ம் திகதியில் 6753 இலக்கத்தில் அளந்து வரைந்த நில அளவைப்படத்தின் பிரகாரம் நில.பர.08 குளி 04.09. இதில் நன்கொடையளிக்கப்பட்ட நில. பர.03 குளி 2 நீக்கிய மிகுதி ஆதனம் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் N. கேதீஸ்வரன் அவர்களால் 10.08.2020ம் திகதியிட்டு 4725ம் இலக்கத்தில் அளந்து வரைந்த நில. அளவைப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டு இதன் விஸ்தீரணம் நில. பர 4 குளி 13.81

கிழக்கு:-பாதை

வடக்கு :- நந்தகுமார் பெண் அஞ்சலா பத்மினியின் ஆதனம்.

மேற்கு :- சென் மேரிஸ் சேர்ஜ் ஆதனமும் ராஜன் கூலின் ஆதனமும்.

தெற்கு:- செம்மணி வீதி.

தற்போது பிலிப் வசந்தராஜன் பெண் றூபகாந்தி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது வசந்தராஜன் பெண் றூபகாந்தி என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இம்மானுவல் ஆனல்ட்**
**முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(c-912)

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 - 01 - 1954



மறைவு
13 - 12 - 2020

## அல்பேட் ஜெபரட்ணம் கதிர்காமர்

**(ஓய்வுநிலை கொமர்சல் வங்கி அதிகாரி)**

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பேட் ஜெபரட்ணம் கதிர்காமர் அவர்கள் 13.12.2020 அன்று காலமா னார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோன் கதிர்காமர், திலகா கதிர்காமர் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், வசுந்திராவின் (ஓய்வுநிலை கொமர்சல் வங்கி அதிகாரி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் சடாட்சரண், குணபூசணி சடாட்சரண் ஆகியோரின் அன்பு மருமனும், றொபேட் கதிர்காமர், சாந்தி, தம்பிராஜ் ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற லயனஸ் தம்பிராஜா மற்றும் சந்திரிகா சுதேந்திரன், காலஞ்சென்ற சிவசந்திரமௌலி மற்றும் தபோதினி பஞ்சநாதன், சஞ்ஜயன், துளசி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.12.2020 இன்று காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நல்லடக்க ஆராதனையைத் தொடர்ந்து நவாலி ஆரியம்பிட்டி மயானத்தில் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

"லக்சுமி வாசா"
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(4962)

தகவல்:
மனைவி
0776688202

# கண்ணீர் அஞ்சலி

வலம்புரி குடும்பத்தைச் சேர்ந்த த.கிருஷ்ணலீலா
அவர்களின் அன்புத் தந்தை

## செல்லையா தர்மகிருஷ்ணர்



அவர்களின் மறைவுச்
செய்தி அறிந்து துயரடைகிறோம்.
அன்னாரின் இழப்பால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா எல்லாம் வல்ல
பரம்பொருளின் பாதார
விந்தங்களில் இளைப்பாற
இறை அருள் வேண்டிப்
பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**வலம்புரிக் குடும்பம்**

(இ)

# அரசுடன் பேசுவதற்கு தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமை மிகவும் அவசியம்

## சுரேன் ராகவன் சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**அரசுடன் பேசுவதற்கு தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமை மிகவும் அவசியம் எனப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.**



தொலைக்காட்சியொன்றின் நேரடி அரசியல் விவாத நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போது இதனைத் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை பௌத்தர்களின் அமோக ஆதரவினைப் பெற்று. ஆழமான சிங்கள தேசியத்துவத்துடன் தற்போது ஆட்சியமைத்துள்ள அரசுடன் பேசுவதற்கு தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமையும் முக்கியமானதாக காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்ததுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியிலுள்ள, தேசியவாத தென்னிலங்கை அரசுடன், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு, புதியதொரு அணுகுமுறையையும் அரசியல் மொழியையும் உருவாக்க வேண்டிய பொறுப்பு தமிழ் புத்திஜீவிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# மனோகணேசனின் கருத்துக்கு உலமா தலைவர் எதிர்ப்பு



(கொழும்பு)

அரசியல் கைதிகள், தோட்டத்தொழிலாளர் பிரச்சினை எனும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு முஸ்லிம் அரசியல் தலைவர்களும் குரல் கொடுக்க வேண்டும் என மனோ கணேசன் கூறியிருப்பது அரசியல், ஊடக களம் பற்றிய அவரது அறியாமையைக் காட்டுகிறது என உலமா கட்சி தெரிவித்துள்ளது. இது பற்றி அக்கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என ரணில், மைத்திரி, சஜித், மனோ அரசிடம் உலமா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. அது போன்று சில முஸ்லிம் அரசியல்வாதிகளும் பேசியுள்ளனர். இவை பற்றி நிறையவே செய்திகள் ஊடகங்களில் வந்தும் மனோவுக்கு தெரியவில்லை என்பது ஆச்சரியமாக உள்ளது.


கடந்த அரசாங்கம் என்பது தமிழரும் முஸ்லிம்களும் 98 வீதம் வாக்களித்து, தமிழ், முஸ்லிம் கட்சிகளால் கொண்டு வரப்பட்ட அரசாங்கம். அதில் மனோ கணேசனும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்தார். அவரது கூட்டாளியான ஹக்கீமும் அமைச்சராக இருந்தார். இருந்தும் ஏன் இவர்களால் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியவில்லை. ஏன் தோட்டத் தொழிலாளரின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை.

இவர்கள் அமைச்சரவையில் பிரதமர் ரணிலுடன் இருந்து கொண்டு எதனைக் கிழித்தார்கள்? என அவர் மேலும் கேள்வியெழுப்பினார். (ஜ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2182

### தசி

பொய்கள் பறநாள் பல்லாக்கில் வரலாம்



ஆனால் உண்மை தாமதமானாலும் ஊர்வலமாய் வரும்.

### தருண்



ஒவ்வொரு அனுபவத்தின் முடிவிலிருந்தும் ஒரு நல்ல பாடத்தை கற்றுக்கொள்வோம்... அதுவே நாம் வாழ்க்கையில் வெற்றியடைய உதவும்...!!

### சலோமினி

என்னதான் யுத்தம் முடிஞ்சு எண்டு சொன்னாலும் மண்மூடை என்னவோ யாழ்ப்பாணத்தார விடுறதா இல்லை




### கார்வண்ணன்



10 மாதத்தில பிறக்கிறோம். அப்புறம் எதுக்கு 12 மாசத்துக்கு ஒரு தடவை பிறந்தநாள் கொண்டாடுறோம்...

### யர்ஷி

'நான்' என்கிற அகம்பாவம்,
'அவனா' என்கிற பொறாமை,
'எனக்கு' என்கிற பேராசை,
இவை எப்பொழுதும் ஒரு மனிதனை வாழ வைக்காது.

### அஜி

மனைவியுடன் சண்டை; ஆத்திரத்தில் 450 கி.மீ நடந்தே சென்ற கணவர்!



நான்லாம் இவன மாதிரி ஆத்திரப்பட்டு நடக்க ஆரம்பிச்சிருந்தா இந்நேரம் செவ்வாய் கிரகத்துக்கே போயிட்டு வந்திருப்பேன்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆயுர்வேத மருந்து மக்களை தவறாக வழி நடத்தக் கூடாது

## சம்பிக்க வலியுறுத்து



(கொழும்பு)

கொரோனாவுக்கு சிகிச்சை என்று கூறப்படும் ஆயுர்வேத மருந்து, மக் களை தவறாக வழிநடத்தும் நாடகமாக மாறி விடக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவ அமைப்பின், முறையான பரிசோதனையின் பின்னரே கொரோனாவுக்கு மருந்தை அங்கீ கரிக்க வேண்டும்.

இலங்கையில் ஆயுர் வேத சிகிச்சையை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு உள் ளது. எனவே அந்த அமை ப்பு மருந்தை பரிசோதிக்க வேண்டும், பின்னர் ஒரு நாடகத்தை உருவாக்குவத ற்கு பதிலாக விநியோகத் திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (ஐ)

# கொழும்பிலேயே கூடுதலான அபாய நிலைமை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்திலேயே கூடுதலான கொரோனா அபாயம் காணப்படுகின்றது என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் வைத்தியர் ஹரித அளுத்கே இந்த விடயத்தை நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் தொடர்ந்தும் கூடுதலான கொரோனா தொற்றாளிகள் பதிவாகி வருவதாகவும், அதிலும் கொழும்பு நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியிலேயே 80 வீதமான தொற்றாளிகள் பதிவாகி உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# கண்டி நில நடுக்கம் இம்மாத இறுதியில் அறிக்கை

(கண்டி)

கண்டி - திகன பகுதியில் பதிவான சில நிலநடுக்கங்கள் தொடர்பிலான ஆய் வுக் குழுவினரின் அறிக்கை இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறித்த பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் குறித்து ஆராய்ந்து அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு அதனுடன் தொடர்புடைய அமைச்சர் மகிந்த அமரவீரவினால் புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து 5 பேர் அடங்கிய விசேட நிபுணர்கள் குழு கண்டி -திகன பகுதிக்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டது.

குறுகிய காலத்திற்குள் அந்தப் பகுதியில் மூன்று நில நடுக்கங்கள் பதிவாகியுள்ளன. பூமியின் உட்புறத்தில் உள்ள சுண்ணாம்புப் பாறைகளில் ஏற்பட்டுள்ள அழுத்தம் காரணமாக இந்த நடுக்கம் பதிவாகியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கூட்டமைப்பிற்கு தடைவிதிக்காமல் மகிந்த பெரிய தவறிழைத்துவிட்டார்

## வீரசேகர சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாம் தடை செய்யாமல் விட்டு விட்டோம். அதுதான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விட்ட தவறு என பொதுமக்கள் பாதுகாப்புக்கான அமைச்சர் ஓய்வு பெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் கூறினார். தொடர்ந்து கூறுகையில்,

"இந்த நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆதரவாக கூட்டமைப்பினர் சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர். அதை விடுத்து எமது நாட்டில் கூட்டாட்சியை அறிமுகப்படுத்துவது தொடர்பாக அவர்கள் ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடினால், அவர்கள் செய்து கொண்ட சத்தியப் பிரமாணத்துக்கு எதிராகவே நடந்து கொள்கின்றனர்.

அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு பிழை செய்து விட்டாரென நான் நினைக்கிறேன். இந்த தமிழ் அரசியல்வாதிகளுக்கு அவர் அனுதாபம் காட்டியுள்ளார்.

ஹிட்லர் தோற்கடிக்கப்பட்ட போது அவரது நாசி அரசியல் கட்சி அழிக்கப்பட்டது. அதே போல் பொல்பொட் கொல்லப்பட்ட போது கைமர்ரோக் அரசியல் கட்சியும் அழிக்கப்பட்டது.

அவ்வாறே சதாம் ஹுசெய்ன் கொல்லப்பட்ட போது அவரது பாத் அரசியல் கட்சி முடக்கப்பட்டதுடன், ஹொஸ்னி முபாரக் தோற்கடிக்கப்பட்ட போது



அவரது தேசிய அரசியல் கட்சியும் முடக்கப்பட்டது.

எனினும் உலகின் மோசமான பயங்கரவாத இயக்கமான புலிகள் இயக்கத்தை தோற்கடித்த போது அதன் பினாமியும் அரசியல் கரமுமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாம் தடை செய்யாமல் விட்டு விட்டோம்.

அதுதான் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விட்ட தவறு என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உயில்

அன்று ஒருநாள் உயில் என்றால் என்ன? செட்டி மென்ட் என்றால் என்ன? என்று பேசிக்கொண்டிருந்தோம் அல் லவா? அதைக் கேட்ட சிலபேர்..உயிலைப் பற்றி இன்னும் கொஞ்சம் விவரமாக பேசினால் நல்லது என்றார்கள். அதனால் விவரம் தெரிந்தவர்களைக் கேட்டுவிட்டு அதற்குப் பின்பு தான் இப்பொழுது பேசுகின்றேன்.

உயில் சம்பந்தமாக பல நேயர்கள் கேட்டிருந்த கேள்விகளுக்கு இந்தத் தகவலிலே பதில் இருக்கின்றது. தேவையானதை தேவைப்படுகின்றவர்கள் எடுத்துக் கொள்ளுங்கள். உயில் என்றால் என்ன? ஒரு நபர் தனக்குப் பின்னால் தன்னுடைய சொத்துக்கள் யாருக்குப் போய்ச் சேர வேண்டும் என்று நினைக்கிறாரோ அந்த நினைப்பை சட்டப்படி உறுதிப்படுத்துவது தான் உயில். சரி உயிலை யார் எழுதலாம்? பதினெட்டு வயது பூர்த்தியான யாரும் உயில் மூலமாக சொத்துக்களை விநியோகிக்கலாம்.கண் பார்வை இல்லாதவர்கள்–காது கேளாதவர்கள்– வாய் பேச முடியாதவர்கள்– இவர்கள் எல்லாம் கூட உயில் எழுதி வைக்கலாம்.புத்தி சுவாதீனம் இல்லாதவர்கள் கூட சில சமயம் புத்தி தெளிவாக இருந்தால் உயில் எழுதலாமாம்.

குடி போதையிலே இருக்கின்றவர்கள் ,தாங்கள் என்ன செய்கின்றோம் என்பதை தெளிவாக அறிய முடியாதவர்கள், நோய் நொடியிலே இருக்கின்றவர்கள்– இவர்கள் எல்லாம் உயில் எழுத முடியாது.

ஒருத்தரை நிர்ப்பந்தப்படுத்தி – ஏமாற்றி அல்லது சுய நினைவில்லாத ஒருத்தரிடம் எழுதி வாங்கி– வைக்கின்ற உயில் செல்லாது.உயிலை இந்த முறையில் தான் இந்தப் படிவத்திலே தான் எழுத வேண்டும் என்று சட்டத்திலே விதி எதுவும் கிடையாது. இதற்கு முத்திரைக் கட்டணமும் (Stamp Duty) கிடையாது.

உயிலை வெற்றுக் காகிதத்திலே எழுதலாம். அச்சடிக்க வேண்டும், டைப் அடிக்க வேண்டும் என்கின்ற அவசியம் கூட இல்லை. கையாலேயே கூட எழுதலாம். எழுதியிருப்பது புரிய வேண்டும். அவ்வளவு தான்.குறைந்த பட்சம் இரண்டு சாட்சிகளை வைத்துக் கொண்டு உயில் எழுதுகின்றவர்கள் அதிலே கையெழுத்துப் போட வேண்டும்.கையெழுத்து போடத் தெரியாது என்றால் இடது கைப் பெருவிரல் ரேகை வைக்கலாம். உயில் சாசனத்திற்கு சாட்சிகள் கையெழுத்து இல்லை என்றாலும் அது செல்லாது.

சலுகைகள் பெற்ற சாட்சிகள் தேவையில்லை. அது என்னென்றால் விமானப்படை, கப்பல் படை அல்லது யுத்தத்திலே பணிபுரியும் நபர்கள் எழுதுகின்ற உயில் அது. அதற்கு சில விசேட சலுகைகள் உண்டு. ஒருத்தர் முதலிலே ஒரு உயில் எழுதி வைக்கின்றார்.அதற்குப் பின்பு மனது மாறிப் போகின்றது. அது வேண் டாம் என்று நினைக்கின்றான். ரத்து செய்து விடலாம். அதற்குப் பின்பு வேறு உயிலும் எழுதலாம் உயிரோடு இருக்கின்ற வரைக்கும் எத்தனை தடவை வேண்டும் என்றாலும் உயில் எழுதலாம். கடைசியாக எழுதப்பட்ட உயில் சட்டப்படி சரியாக இருந்தால் அது தான் அமுலுக்கு வரும். சரி

எழுதுகின்ற உயிலை ரகசியமாக வைத்திருப்பது எப்படி? இது ஒரு கேள்வி.இதற்கு என்ன செய்ய வேண்டும் என்றால் ஒருத்தர் உயிலை எழுதிய பின்பு அவர் தானாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலமாகவோ ஒரு கவரிலே போட்டு சீல் வைத்து, கவர் மேல் தன் பெயரை எழுதி அல்லது முகவர் பெயரை எழுதி –கவர் மேலே என்ன அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது என்ற விபரமும் எழுதி சார்பதிவாளரிடம் ஒப்படைக்கலாம். இதற்குக் கட்டணம் உண்டு.

அதற்குப் பின்பு எப்பொழுது தேவைப்படுகின்றதோ.. அப்பொழுது ஒரு மனு கொடுத்து அந்தக் கவரைத் திரும்ப வாங்கிக் கொள்ளலாம்.இப்பொழுது எழுதுகின்ற உயிலை, இவ்வளவு நாளுக்குள்ளே பதிவு செய்ய வேண்டும் என்கின்ற காலவரையறை உண்டா? என்பது ஒரு கேள்வி.

சாதாரணமாக எந்த ஒரு ஆவணத்தையும் பதிவு செய்ய வேண்டும் என்றால் அதிலே கையெழுத்துப் போட்டிருக்கின்ற திகதியிலிருந்து 120 நாட்களுக்குள்ளே சார்பதிவாளரிடம் சமர்ப்பித்துவிட வேண்டும் என்று சட்டம் உண்டு.ஆனால் உயிலுக்கு அது தேவை இல்லை. எப்பொழுது வேண்டும் என்றாலும் பதிவு செய்யலாம்.


எங்கள் ஆள் ஒருத்தர் ஒரு நாள் மிகவும் அவசரமாக வந்தார். இந்த உயில் எழுதுவது சம்பந்தமாக முழு விபரமும் எனக்கு உடனே தெரியவேண்டும் என்றார். நான் உடனே அவரை வக்கீல் ஒருத்தரிடம் அழைத்துக் கொண்டு போனேன். இவர் அவரிடம் எல்லா விபரமும் கேட்டுத் தெரிந்து கொண்டார். மிகவும் நன்றி என்று சொல்லிவிட்டு இரண்டு பேரும் வெளியே வந்தோம். அதன் பின்பு இவரிடம் கேட்டேன்.

ஆமாம் இவ்வளவு விபரமாக கேட்கின்றீர்கள் உங்களுக்கு எத்தனைப் பிள்ளைகள் என்றேன். ஆறு பேர் சேர் என்றார். சரி இருக்கின்ற சொத்து எவ்வளவு என்றேன். அதை இனிமேல் தான் சம்பாதிக்கப் போகின்றேன் என்றார்.


# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

19

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



குழு அறை இலக்கம் 8



**பாராளுமன்ற நிலையியற் கட்டளை இல. 8(1) இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, பாராளுமன்றம் வேறு விதமாகத் தீர்மானித்தாலன்றி, ஒரு மாதத்தின் முதலாவது ஞாயிற்றுக் கிழமையை அடுத்து வரும் வார்த்திலும் ஒன்றுவிட்ட அடுத்த வாரத்திலுமாக இரு வாறங்களிலும் பாராளுமன்றம் அமர்தல் வேண்டும். அத்தகைய முதலாவது மூன்றாவது வாரங்களில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பாராளுமன்றம் அமர்தல் வேண்டும்.**

**பாராளுமன்ற அமர்வு நேரங்கள்**

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவாக, 2016 மார்ச் 08 ஆம் திகதியிலிருந்து பாராளுமன்ற அமர்வு நேரங்கள் செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் பி.ப. 1.00 முதல் பி.ப. 7.30 வரையும் வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மு.ப. 10.30 முதல் 12.30 வரையும் பி.ப. 1.30 முதல் பி.ப. 7.30 வரையுமாகும்.

மேற்சொன்ன வண்ணம் பாராளுமன்றம் பின்வருமாறு கூடுகின்றது:-

செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில்

பி.ப. 1.00 முதல் பி.ப. 2.00
வாய் மூல விடைக்கான வினாக்கள்

பி.ப. 2.00 முதல் பி.ப. 6.30
சபையின் பிரதான அலுவல்கள்

பி.ப. 6.30 முதல் பி.ப. 7.30
ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை

வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில்

மு.ப. 10.30 முதல் மு.ப. 11.30
வாய் மூல விடைக்கான வினாக்கள்

மு.ப. 11.30 முதல் பி.ப. 12.30
சபையின் பிரதான அலுவல்கள்

பி.ப. 1.30 முதல் பி.ப. 6.30
சபையின் பிரதான அலுவல்கள்

பி.ப. 6.30 முதல் பி.ப. 7.30
ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை

மதியபோசன இடைவேளை பி.ப. 12.30 முதல் பி.ப. 01.30

ஒவ்வொரு மாதத்தினதும் முதல் அமர்வு வாரத்தில் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில், பிரதம அமைச்சரிடம் கேட்கப்படும் வினாக்கள் மற்றும் ஒத்திவைப்பு வேளையின் போதான வினாக்கள் பின்வருமாறு கால ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன:-

புதன்கிழமை

பி.ப. 1.00 முதல் பி.ப. 1.30
பிரதம அமைச்சரிடம் கேட்கப்படும் வினாக்கள் (4 வினாக்கள்)

வியாழக்கிழமை

பி.ப. 6.30 முதல் பி.ப. 7.30
ஒத்திவைப்பு வேளையின் போதான வினாக்கள் (4 வினாக்கள்)

**நிலையியற் கட்டளைகள்**

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளானவை இணங்கப்பட்ட விதிகளாகும். இவற்றின் கீழ் நடைமுறைகள், விவாதம் மற்றும் சபையினுள் உறுப்பினர்களது நடத்தை என்பன சீரமைக்கப்பட்டுள்ளன. நிலையியற் கட்டளைகளின் பிரதான நோக்கமானது, பாராளுமன்றத்தின் ஒழுங்கமைதியுடைய, காத்திரபூர்வமான செயற்பாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகளை வகுத்துரைப்பதாகும். நிலையியற் கட்டளைகள் பாராளுமன்ற நடவடிக்கைகளின் மிக முக்கியமான மூல ஆதார ஏடாகவும் மற்றும் விவாதங்களுக்கு அதிக சந்தர்ப்பம் அளிப்பனவாகவும், பரிசீலனையின் பின்பு தீர்மானங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குவனவாகவும் உள்ளன. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் நிலையியற் கட்டளைகளுக்கு விதிகளுக்கான அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நூல் நிலையத்தில் காணப்படுகின்ற பதிவுகளின்படி நிலையியற் கட்டளைகளின் முதலாவது தொகுதி அப்போதைய சட்டவாக்கச் சபையினால் 1912ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அப்போதைய பிரித்தானிய பாராளுமன்றத்தை இவை அடிப்படையாகக் கொண்டமைந்தன. அதன் பின்னர் பாராளுமன்ற வரலாற்றிலே பல்வேறு கட்டங்களிலே அத்தகைய புதிய நிலையியற் கட்டளைகள் அறிமுகப் படுத்தப்பட்டன.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளானவை இணங்கப்பட்ட விதிகளாகும். இவற்றின் கீழ் நடைமுறைகள், விவாதம் மற்றும் சபையினுள் உறுப்பினர்களது நடத்தை என்பன சீரமைக் கப்பட்டுள்ளன. நிலையியற் கட்டளைகளின் பிரதான நோக்கமானது, பாராளுமன்றத்தின் ஒழுங்கமைதியுடைய, காத்திரபூர்வமான செயற்பாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகளை வகுத்துரைப்பதாகும்.**

பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் நிலையியற் கட்டளைகளுக்கு ஏற்பாடு செய்யலாமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 74ஆம் உறுப்புரை குறிப்பிடுகின்றது. முன்னர் நடைமுறையில் இருந்த நிலையியற் கட்டளைகளுக்குப் பொருத்தமான மாற்றங்களை மேற்கொண்டு, தற்போது நடைமுறையிலுள்ள நிலையியற் கட்டளைகள், 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் கட்டமைக்கப்பட்டு, 1979ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டன. சபையினால் காலத்திற்குக் காலம் நிலையியற் கட்டளைகளுக்குத் திருத்தங்கள் கொண்டுவர முடியும்.

புதிய நிலையியற் கட்டளைகள், 2018 மார்ச் மாதம் 07 ஆம் திகதி. பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட, 2018 ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

116ஆம் நிலையியற் கட்டளையின் கீழ், நிலையியற் கட்டளைகள் குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டும்.

இக்குழுவானது சபாநாயகர் பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் மற்றும் தெரிவுக் குழுவால் நியமிக்கப்படும் வேறு ஆறு உறுப்பினர்களை உள்ளடக்கியதாகக் காணப்படும். பாராளுமன்றத்தின் அலுவல் தொடர்பான நடைமுறை, ஒழுங்கு ஆகிய விடயங்களைப் பரிசீலிப்பதும், நிலையியற் கட்டளைகளில் திருத்தங்கள் அவசியமெனக் கருதுகின்ற விடயங்கள் தொடர்பான விதப்புரைகளை மேற்கொள்வதும் நிலையியற் கட்டளைகள் குழுவின் பணியாகும்.

எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பிரேரணைகளை அவை தொடர்பான முன்னறிவித்தலுடன் குழுவிற்கு ஆற்றுப்படுத்தலாம். குழுவானது அவற்றைப் பரிசீலனை செய்து தனது அறிக்கையில் உள்ளடக்கலாம். இவ்வறிக்கையானது முறையாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்காகச் சபையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பொதுத் தேர்தல் ஒன்றின் பின்னர் நடைபெறும் முதலாவது கூட்டத்தின் பொழுது மேற்கொள்ளப்படவேண்டிய நடைமுறைகள், உறுப்பினர் இருக்கை ஒழுங்கு, சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோரைத் தெரிவு செய்தல், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம், கூட்டங்களுக்கான திகதி, நேரம் ஆகியவற்றை நிர்ணயித்தல் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதாகத் தற்போதைய நிலையியற் கட்டளைகள் தொகுதி காணப்படுகிறது. கூட்ட நடப்பெண், பாராளுமன்ற அலுவல்கள் போன்றனவும் கூட நிலையியற் கட்டளைகள் மூலமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவசரச் சட்ட மூலங்களுக்கான நடைமுறைகள், தனியார் உறுப்பினரின் சட்டமூலம், ஒதுக்கீட்டுச் சட்டமூலம், வாக்களித்தல் போன்றனவும் நிலையியற் கட்டளைகளில் விதித்துரைக்கப்பட்டுள்ளன. விவாதத்திற்கான ஒழுங்கு விதிகள், பாராளுமன்றத்தில் உரையாற்றும் உறுப்பினர்களுக்கான விதிகள், உரையாற்றா உறுப்பினர்களுக்கான விதிகள் மற்றும் பாராளுமன்றத்தில் ஒழுங்கு போன்ற விடயங்களை நிலையியற் கட்டளைகள் தெளிவாக நெறிப்படுத்துகின்றன.

ஜனாதிபதி, நீதிபதிகள் மற்றும் ஏனைய உயரதிகாரிகள் ஆகியோருக்கெதிரான குற்றப் பிரேரணையின் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக நிலையியற் கட்டளைகளில் திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே, பாராளுமன்றச் செயலாளர் நாயகம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி, தேர்தல்கள் ஆணையாளர், நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் ஆகியோரை அவர்களின் பதவியிலிருந்து அகற்றுவது தொடர்பான ஏற்பாடுகளும் அவற்றில் உள்ளன.

**ஜனாதிபதி, நீதிபதிகள் மற்றும் ஏனைய உயரதிகாரிகள் ஆகியோருக்கெதிரான குற்றப் பிரேரணையின்பொழுது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக நிலையியற் கட்டளைகளில் திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே, பாராளுமன்றச் செயலாளர் நாயகம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி, தேர்தல்கள் ஆணையாளர், நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் ஆகியோரை அவர்களின் பதவியிலிருந்து அகற்றுவது தொடர்பான ஏற்பாடுகளும் அவற்றில் உள்ளன.**

முழுப் பாராளுமன்றக் குழு, தெரிவுக் குழுக்கள் (Select Committees), ஆலோசனைக் குழுக்கள் மற்றும் சிறப்பு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட சபைக் குழு, தெரிவுக் குழுக்கள் (Committees on Selection),

(தொடரும்...)

# மணல் அகழ்விற்கான அனுமதிப்பத்திர விநியோகம் தொடர்பில் அதிக கவனம்



(கொழும்பு)

கள ஆய்வின்றி காணிகளில் மணல் மற்றும் மண் அகழ்வதற்கான அனுமதி வழங்குவதை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த அனுமதிப்பத்திரங்கள், தென்னந்தோட்டங்களில் மணல் அகழ்வதற்கு பயன்படுத்தப்படுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாக சுற்றாடல் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வட மேல் மாகாணத்தில் தென்னந்தோட்டங்களில் மணல் அகழப்படும் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப்பணியகத்திற்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியிருந்தார். (ஐ)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## நன்றியை காட்டும் நைவேத்தியம்

(தொடர்ச்சி)

மூலவர் விக்கிரகம் முன்பு நீங்கள் வைக்கும் உணவைக் கடவுள் எடுத்து சாப்பிடவா? போகின்றார் என்று சிலர் கேலி செய்யக்கூடும். அத்தகையவர்களுக்கு நாம் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம் என்ற அடிப்படைத் தத்துவம் புரியாது.

நைவேத்தியம் அல்லது நிவேதனம் என்றால், உணவுப் பொருட்களை வைத்து, சுவாமியைச் சாப்பிடச் செய்கின்றோம் என்பது பொருள் அல்ல. நமக்குப் படியளக்கும் பரம்பொருளுக்கு நாம் படியளந்து விட முடியுமா? அது நடக்கிற காரியமா?

நிவேதனம் என்றால் நிவேதயாமி என்று பொருள். இதற்கு அறிவிக்கிறேன் என்று அர்த்தம்.

இறைவனே, இந்தவேளை உன் கருணையால் எனக்கு இந்த உணவு கிடைத்தது. அதற்கு என்னுடைய நன்றி என்று சொல்லி விட்டுச் சாப்பிட வேண்டும்.

இப்படி மனப்பூர்வமாக நிவேதனம் செய்யப்படும் உணவுப் பொருட்கள் பிரசாதம் என்ற புனித நிலையை அடையும். இது எதைக் காட்டுகின்றது தெரியுமா?

ஒருவன் மனதில் எவ்வளவு தான் கெட்ட நினைப்புடன் இருந்தாலும் இறைவனை சரண் அடைந்து விட்டால் புனிதனாகி விடலாம் என்பதையே காட்டுகிறது.

கோவிலில் இறைவன் அருளால் புனிதமாகி விடும் பிரசாதத்தை கூச்சப்படாமல் வாங்கி உண்ண வேண்டும். ஏனெனில் பிரசாதங்கள் நம்மிடம் சத்துவ குணத்தை வளர்க்கும் என்று நிபுணர்கள் ஆராய்ந்து கண்டுபிடித்துள்ளனர்.

மனிதர்களிடம் சத்துவ குணம் வளர்ந்தால் மனிதனில் வன்முறை எண்ணங்கள் வேகமாக வராது. தர்மங்களை கடைப்பிடிக்க தோன்றும். இறைவனை அடைய வேண்டும் என்ற விருப்பம் அதிகரிக்கும்.

நிவேதனம் செய்யப்படாத எந்த உணவும் பக்திக்கு எதிரான தாமச குணத்தை அதிகரிக்கச் செய்யும். பகவத் கீதை 4 ஆம் அத்தியாயத்தில், தாமச குணத்தை தூண்டும் உணவுப் பொருட்கள் பட்டியலில் நிவேதிக்காத உணவை ஒரு காரணமாக கண்ணன் சுட்டிக் காட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இனி ஆலயங்களுக்கு செல்லும் போது இறைவனுக்குப் படைக்கப்பட்டவைகளை பிரசாதமாகத் தந்தால் மறக்காமல் வாங்கிச் சாப்பிடுங்கள்.

ஒவ்வொரு இறைவனுக்கும் ஒவ்வாரு வகையான நைவேத்தியம் படைப்பதை வழக்கத்தில் வைத்துள்ளனர். அதற்கு ஏற்ற பலன்களும் கிடைக்கும்.

விநாயகர் என்றதுமே உங்களுக்கு மோதகம் நிவேதனம் செய்யப்படுவது தான் நினைவுக்கு வரும். மோதகத்தை மேலோட்டமாகப் பார்த்தால் அது வெறும் மாவு உருண்டையாகத் தெரியும். ஆனால் ஆத்மார்த்தமாக அந்த பிரசாதத்தைக் கையாண்டால், மோதகம் படைப்பது நமக்கு ஆனந்தம் அளிக்கும் என்பத புரியும்.

பிள்ளையார்பட்டியில் ஒவ்வொரு ஆண்டும் விநாயகர் சதுர்த்தி தினத்தன்று 18 படி அரிசியில் ராட்சத கொழுக்கட்டை தயாரித்துப் படைப்பார்கள்.இது மன அமைதியை தர வல்லது.

சிவாலயங்களில் நைவேத்தியம் செய்யும் போது ஒரு விதியை தவறாமல் கடைப்பிடிப்பார்கள். லிங்கத்தின் ஈசான முகத்துக்கு சுத்த அன்னமும், தத்புருஷ முகத்துக்கு சக்கரைப் பொங்கலும் அகோர முகத்துக்கு எள் அன்னமும் வாம தேவ முகத்துக்கு தயிர் அன்னமும் சத்யோஜாத முகத்துக்கு வெண்பொங்கலும் படைக்க வேண்டும் என்று சந்தானாமகத்தில் கூறப்பட்டுள்ளது.

அது போல நந்திக்கு அரிசி, பயத்தம் பருப்பு, வெல்லம், துருவிய தேங்காய் ஆகியவற்றை ஒன்றாக கலந்து பிரதோஷ காலங்களில் விசேஷ நைவேத்தியமாக படைத்தல் வேண்டும். தெட்சிணாமூர்த்திக்கு கடலை சாதம் படைப்பது மிகவும் நல்லது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## கொள்ளை;நால்வர் கைது

(கொழும்பு)

வாழைச்சேனை- புனானை தனிமைப்படுத்தல் நிலையத்தில் சிகிச்சை பெற்றுவந்த நான்கு நோயாளிகள், கொள்ளை சம்பவமொன்று தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். புனானை தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்த இலத்திரனியல் பொருட்கள் சிலவற்றை களவாடியுள்ளதாக வைத்தியர்களினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பொலிஸாரினால் இவர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

புனானை தனிமைப்படுத்தல் நிலையத்தில் சிகிச்சை பெற்றுவந்த குறித்த சந்தேக நபர்களின் தனிமைப்படுத்தல் செயற்பாடு கடந்த 12 ஆம் திகதி நிறைவடைந்து விடுவிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஐ)

## பி.சி.ஆர்.அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தலையடுத்து நாட்டில் பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிலையில் நாளொன்றில் மேற்கொள்ளப்பட்ட அதிகூடிய பி.சி.ஆர்.பரிசோதனைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கமைய 15,239 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கொரோனா ஒழிப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ)

## 41 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 41 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியை கடைப்பிடிக்காமை உள்ளிட்ட தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமையாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கமைய கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் 1,390 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 220 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 350 | 320 | 350 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 200 | 200 |
| பூசணி | 100 | 100 | 120 |
| புடோல் | 150 | 140 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 |
| பாகற்காய் | 500 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 150 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 500 | 400 | 300 |
| லீக்ஸ் | 150 | 100 | 100 |
| பீற்றூட் | 120 | 160 | 120 |
| கறிமிளகாய் | 300 | 300 | 280 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 280 |
| போஞ்சி | 280 | 220 | 240 |
| கத்தரிதம்புள்ள | 200 | 220 | 200 |
| கீரை - 1 பிடி | 60 | -- | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 280 | — | 300 |
| வெங்காயப்பூ | 400 | -- | — |
| முள்ளங்கி | 80 | 140 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | 120 |




# விதி என்றால் என்ன?



முல்லா ஒரு பெரிய செல்வந்தர் வீட்டில் அமர்ந்து அச்செல்வந்தருடன் பேசிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அந்தச் செல்வந்தர் முல்லாவிடம் விதி என்றால் என்ன? என்று கேட்டார்.

அதற்கு முல்லா நாம் எதிர்பார்க்கும் ஒன்று நமக்கு நடக்காமல் போனால் அதற்குப் பெயர் தான் விதி என்றார். செல்வந்தருக்கு ஒன்றுமே புரியவில்லை அதனால் முல்லாவிடம் சற்று தெளிவாகக் கூறும் படிக் கேட்டார்.

முல்லா உடனே நண்பரே, முதலில் நான் உங்களை எதற்காகச் சந்திக்க வந்தேன் என்பதைக் கூறி விடுகிறேன். பிறகு நான் உங்களுக்கு விதியைப் பற்றி தெளிவாக விளக்குகிறேன் என்றார். சரி சொல்லுங்கள் என்றார் செல்வந்தர்.

முல்லா, உங்களிடம் எனக்கு ஒரு கோடிப் பொன்னைக் கடனாகக் கேட்டு வாங்கிப் போகத்தான் வந்தேன் என்றார்.

என்ன ஒரு கோடிப் பொன் வேண்டுமா? எதற்காக கேட்கிறார் என்பது புரியாமல் திகைத்தார் செல்வந்தர். முல்லா மீண்டும் செல்வந்தரைப் பார்த்து. நான் கேட்டது என்ன ஆயிற்று? என்று கேட்டார்.

இவ்வளவு பெரிய தொகையைத் திடீரென்று கேட்டால் எப்படி? என்றார் செல்வந்தர்.

நான் உம்மிடம் கடன் கேட்டால் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிகையுடன் வந்தேன்.

ஆனால் உங்களால் எனக்குப் பணத்தைக் கொடுக்க முடியவில்லை அல்லது கொடுக்க விரும்பவில்லை என்று நீங்கள் தரும் பதிலைக் கேட்டு எனக்கு ஏற்படும் ஏமாற்றம் தான் விதி என்று நினைத்து என் மனதை சமாதானப்படுத்திக் கொள்வேன் என்றார்.

பிறகு செல்வந்தரிடம் முல்லா, இதை தங்களுக்கு விளங்க வைப்பதற்காகவே நான் சும்மா விளையாட்டுக்கு உம்மிடம் கடன் கேட்டேன் நீங்கள் குழப்பமடைய வேண்டாம் எனக் கூறிச் சிரித்தார்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?




அதனால் என்ன? நேராக அவருடைய வீட்டுக்கே சென்று பார்த்துவிடலாமே என்று நண்பர்களுடன் புறப்பட்டார் அலக்சாண்டர்.

புழுதி படிந்த குக்கிராமத்தில் இருந்தது டயாக்னிஸின் வீடு. வாசலில் இருந்த கட்டிலில் படுத்திருந்தார் டயாக்னிஸ். அசைவுகளை வைத்து யாரோ வருகின்றார்கள் என்பது டயாக்னிஸுக்குப் புரிந்துவிட்டது.

ஆனாலும் எழுந்திருக்கவில்லை. அப்படியே படுத்திருந்தார். அசைவின்றி படுத்திருந்தார். வணக்கம் ஐயா.

லேசாக கண்களை இடுக்கியபடியே பார்த்தார் டயாக்னிஸ். எழுந்து உட்கார்ந்தார். மரியாதைக்கு ஒரு புன்னகைகூட இல்லை. அலெக்சாண்டர் முகத்தில் எந்தவிதமான சலனமும் இல்லை. ஆனால் அவருடைய நண்பர்களுக்கோ ஆத்திரம் தலைக்கேறத் தொடங்கியது.

வணக்கம் ஐயா, நிமிர்ந்து பார்த்தார் டயாக்னிஸ். ஓ அலக்சாண்டரா? என்ன விடயம் ?

எப்படி இருக்கின்றீர்கள். சபைக்கு வருவீர்கள் என்று நினைத்தேன். காத்திருந்தேன். பதில் எதுவும் டயாக்னிஸிடமிருந்து வரவில்லை. அலெக்சாண்டர் தொடர்ந்தார்.

தங்களுக்கு உதவி தேவைப்பட்டால் உடனே செய்துதரத் தயாராக இருக்கின்றேன்.

அப்படியா? வெயிலுக்காகவே வெளியில் படுத்திருக்கின்றேன். நீ நின்று கொண்டிருப்பதால் வெயில் விழவில்லை. கொஞ்சம் நகர்ந்து கொள்கின்றாயா? முகத்தில் அடிப்பது போலப் பேசினார் டயாக்னிஸ்.

என்ன எகத்தாளம் உனக்கு? சொல்லிக் கொண்டே டயாக்னிஸை நோக்கி வாளுடன் பாய்ந்தனர் அலெக்சாண்டரின் நண்பர்கள்.

தன் விழியசைவால் அவர்களின் ஆக்ரோஷத்தை தடுத்து நிறுத்தினார் அலெக்சாண்டர்.

உங்களை அவமானம் செய்தவனின் தலை இனிமேல் கழுத்தில் இருக்கவே கூடாது.

உடன் வந்தவர்கள் பொருமினார்கள். கூடாது. டயாக்னிஸைப் போல அறிவில் சிறந்தவர் கிடைப்பது அரிது. எனக்கு மறுஜென்மம் கிடைத்தால் டயாக்னிஸாகவே பிறக்க விரும்புகின்றேன். அவர் என்னிடம் பேசியதே நான் செய்த பாக்கியம். அதைப் பெற்றுவிட்டேன் வாருங்கள் போகலாம்.

(தொடரும்)

பொது வாழ்வு என்பது புயல் வீசும் கடலுக்கு ஒப்பாகும். எனினும் அதைக் கடந்து குறிப்பிட்ட இடத்தைச் சேர்வதில்தான் இன்பம் இருக்கிறது.
– எம்.என்.ராய்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொதுமக்கள் நினைத்தால் கொரோனாவை அடக்கலாம்

மருதனார்மடம் சந்தை வர்த்தகருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 39 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனாத் தொற்று 33 ஆயிரத்தைக் கடந்துள்ளதாயினும் யாழ்ப்பாணத்தில் 39 என்பது அதிக எண்ணிக்கை எனலாம்.

தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க நோய்ப் பரவுகையும் வேகமாக அதிகரிக்கவே செய்யும்.

ஆக, எதிர்வரும் நாட்களில் கொரோனாத் தொற்று ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு உண்டு என ஊகிக்க முடிகிறது.

இவை ஒரு புறமிருக்க, இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் வெவ்வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள் என்பது துரதிர்ஷ்டவசமானது.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக பிரதேசங்களை முடக்குவதை அரசாங்கம் இம்மியும் விரும்பவில்லை.

கொழும்பில் கொரோனாத் தொற்று கட்டுக்கடங்காமல் பரவத் தொடங்கியதையடுத்து இனி கொரோனாவுடன் வாழப்பழகுதல் என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்துள்ளது.

இருந்தும் அரசாங்கத்தின் மேற்போந்த தீர்மானம் ஒரு பொறுப்பான செயல் என்று கூறிவிட முடியாது.

உண்மையில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பொருத்தமான தீர்மானங்களை எடுக்கின்ற அதிகாரத்தை மாகாண சபைகளுக்கும் அதனூடு மாவட்டங்களுக்கும் வழங்கியிருக்க வேண்டும்.

அவ்வாறானதொரு தீர்மானத்தை மத்திய அரசு எடுத்திருக்குமாயின், யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகளை வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், மாவட்டச் செயலர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் கூட்டாக தீர்மானங்களை எடுத்து அதனை அமுல்படுத்தி இருக்க முடியும்.

என்ன செய்வது அதிகாரம் கொழும்பில் இருக்கும்போது, எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாத சூழ்நிலையே உள்ளது.

ஆக, கொரோனாவுடன் வாழப்பழகுதல் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்ற அரசாங்கத்துடன் குறித்த மாகாணத்தை அல்லது மாவட்டத்தை அல்லது ஒரு பிரதேசத்தை முடக்கினால் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நிலைப்பாட்டில் இருக்கக்கூடிய மாகாண, மாவட்ட நிர்வாகத் தரப்பு எதையும் செய்ய முடியாமல் தத்தளிக்கிறது.

இங்குதான் பொதுமக்கள் தாமாக உணர்ந்து வெளியில் நடமாடுவதைக் குறைத்து; முடிந்தளவில் வீடுகளுக்குள் இருப்பது என முடிவு செய்தால், கொரோனாத் தொற்றை நிச்சயம் அடக்க முடியும்.

# முறையான மதிப்பீடின்றி மக்களை சென்றடையும் மருந்துகள் சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தும்

## அரச ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

கொரோனாத் தடுப்பிற்கானவை எனக் கூறப்படும் தேசிய அல்லது ஆயுர்வேத மருந்துகள் முறையான மதிப்பீடின்றி மக்களை சென்றடையுமாயின் அது சுகாதாரத்துறையில் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும். எனவே ஆயுர்வேத திணைக்களம், தேசிய மருத்துவ அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு என்பன அவை தொடர்பில் கட்டுப்பாடுகளை விதிப்பதோடு மதிப்பீட்டினையும் செய்ய வேண்டும் என அரச ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் பிரசாத் ஹெந்தா விதாரண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தேசிய மற்றும் ஆயுர்வேத மருத்துவ முறைகளுக்கு அமைய இடைக்கிடை மருந்துகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான மருந்துகளை வெளிப்படுத்துபவர்களுக்கு நாம் ஒரு விடயத்தை தெளிவாகக் கூற விரும்புகின்றோம். ஏதேனுமொரு தேசிய மருந்து அல்லது ஆயுர்வேத மருந்தினைத் தயாரித்தால் அதனை ஆயுர்வேத திணைக்களத்தில் அல்லது ஆயுர்வேத மருந்துகள் தொடர்பில் ஆராய்வதற்கு சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவிடம் வழங்குமாறு அறிவுறுத்துகின்றோம்.

அதற்குப் பதிலாக சமூக வலைத்தளங்கள் அல்லது ஊடகங்களின் ஊடாக இவ்வாறான மருந்துகளை சமூகமயப்படுத்துவதன் மூலம், மக்கள் அதனைப் பெற்றுக் கொள்வார்களாயின் அவர்களது பணம், காலம், சுகாதார நலன் என அனைத்தும் அபாயத்திற்குள்ளாகும்.

இவ்வாறான மருந்துகளின் பின்னால் ஓட வேண்டாம் என்று மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். மக்கள் நினைத்தவாறு அவற்றைக் கொள்வனவு செய்வதையும் உட்கொள் வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அளவுக்கதிமாக உட்கொள்ளும் மருந்துகள் நிச்சயம் உடலில் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே ஒரு ஒழுங்குமுறைக்கமைய இவற்றை தயார் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம். மாறாக அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமல் அவற்றை உட்கொள்வதால் ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை மக்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். அதே போன்று மருந்துகள் தொடர் பில் அநாவசிய பிரசாரங்களில் ஈடுபடுபவர்களும் இதற்கு பொறுப்புகூற வேண்டும்.

இவ்வாறான தேசிய மருந்துகள் தொடர்பான கண்டுபிடிப்புக்கள் வரவேற்கத்தக்கவை. ஆனால் அவை ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் மக்களை சென்றடைய வேண்டும். அவ்வாறில்லை என்றால் பாரிய சுகாதார நெருக்கடி ஏற்படும்.

எனவே ஆயுர்வேத திணைக்களம், தேசிய மருத்துவ அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு என்பன ஆயுர்வேத அல்லது தேசிய மருந்துகள் தொடர்பில் கட்டுப்பாடுகளை விதிப்பதோடு அவை தொடர்பில் மதிப்பீட்டினையும் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# தபால் பொதிகள் வீடுகளுக்கே

(கொழும்பு)

தபால் மூலம் அனுப்பப்படும் பொதிகளை வீடுகளுக்கே கொண்டு சென்று விநியோகிப்பதற்கான புதிய திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இன்று முதல் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது.

இதற்கு முன்னர் தபால் மூலமான பொதிகளில் வரும் பொருட்களை பெற்றுக்கொள்ளும் வகையில் உரிய நபர்கள் தபால் அலுவலகத்திற்கு வருகை தருவதே நடைமுறையிலிருந்தது.

அதற்கு பதிலாக வீடுகளுக்கு எடுத்துச் சென்று பொதிகளை விநியோகிக்கும்நடைமுறை இன்று முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

அதன் முதற்கட்டமாக 50 ஆயிரம் ரூபா வரையிலான பெறுமதியுள்ள பொதிகளை வீடுகளிற்கு கொண்டு சென்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கு அடுத்த கட்டமாக எதிர்வரும் காலங்க ளில் 50 ஆயிரம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட பொருட்களையும் வீடுகளுக்கு கொண்டுசென்று விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஜ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்புவேலைகளுக்காக நாளை 16 ஆம்திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** கோவில்குளம் 10 ஆவது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம் வரை.

**மன்னார் பிரதேசத்தில்** பூவரசங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## ஆன்மீக எழுச்சி ஏற்படட்டும்!

❖ அன்பு, இரக்கம் இவற்றை செயல்படுத்த வாய்ப்பு அளித்த இறைவனை துதிப்பதுடன், உதவி செய்தவர்களை இறைவனாக எண்ண வேண்டும்.

❖ இரக்கமுள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகியவை நமக்குத் தேவை.

❖ மனிதப்பிறவி ஞானமும் பக்தியும் அடைவதற்காக உருவாக்கப்பட்டுள்ளதால், ஆன்மீக பலத்தால் மட்டுமே இந்தியா எழுச்சி பெறப்போகிறது.

❖ உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகாமல், தைரியத்துடன்வீரனாகத் திகழ வேண்டும்.


❖ இந்தியாவில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் முதலில் ஆன்மீக எழுச்சி உண்டாக வேண்டும். அரசியல் கருத்துக்களை பரப்புவதற்கு முன்னால், நாட்டை ஆன்மீக வெள்ளத்தில் மூழ்கடிக்க வேண்டும்.

❖ தன்னலம் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

❖ பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும், முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வரும்.

# கோலிக்கு பதில் யார்?

## கவாஸ்கர் யோசனை



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 டெஸ்ட்களிலும் விராட் கோலி இடத்தில் யாரை களம் இறக்கலாம்? என்பது குறித்து இந்திய அணியின் முன்னாள் கப்டனும், தொலைக்காட்சி வர்ணனையாள ரும்மான கவாஸ்கர் யோசனை தெரிவித்துள்ளார்.

இந்திய அணி கப்டன் விராட் கோலி முதல் டெஸ்ட் போட்டியில் மட்டுமே விளையாடுவார். எஞ்சிய 3 டெஸ்டில் ஆட மாட்டார். அவரது மனைவி அனுஷ்காவுக்கு குழந்தை பிறக்க இருப்பதால், அவுஸ்திரேலிய பயணத்தில் இருந்து பாதியில் நாடு திரும்புகிறார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக விராட் கோலி 3 டெஸ்டில் விளையாடாதது இந்திய அணிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

இது தொடர்பாக கவாஸ்கர் தெரிவிக்கையில்,

கோலி ஒரு டெஸ்டில் தான் விளையாடவுள்ளார். அதற்கு பிறகு ரகானே கப்டன் பொறுப்பை ஏற்று அணியை வழிநடத்துவார்.

ஆனால் கோலியின் 4-வது வரிசையில் களம் இறங்கப் போவது யார்? என்ற கேள்வி எழுகிறது.

கோலி இல்லாத இடத்தில் எனக்கு தெரிந்து ரகானே களம் இறங்குவார் என்று நினைக்கிறேன். அப்போது ரகானே இடத்தில் கே.எல்.ராகுலோ அல்லது சுப்மன்கில்லையோ களம் இறக்கினால் சரியாக இருக்கும் என தெரிவித்தார். (4)

# லங்கா பிரீமியர் லீக்

## முதல் அரையிறுதியில் காலி வெற்றி

லங்கா பிரீமியர் லீக் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் காலி கிளாடியேற்றர்ஸ் அணி இரண்டு விக்கெட்டுகளால் வெற்றியை தம் வசப்படுத்தியுள்ளது.

கொழும்பு கிங்ஸ் அணிக்கு எதிரான இந்தப் போட்டி அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற காலி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அணிசார்பாக, டி பெல் ட்ரம்மண்ட் 70 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.


பந்துவீச்சில், சந்தகன் மூன்று விக்கெட்டுகளையும் என்.துசார மற்றும் தனஞ்சய லக்ஷன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், 151 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய காலி அணி 19.5 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இந்நிலையில் இரண்டு விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. அணிசார்பாக, பானுக ராஜபக்ஷ 33 ஓட்டங்களையும், தனஞ்சய லக்ஷன் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் செஹான் ஜெயசூர்ய 22 ஓட்டங்களையும் அஷாம் கான் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில், அசான் பிரியஞ்சன் இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதுடன் அஞ்சலோ மத்தியூஸ், துஷ்மந்த சமீர, குயிஸ் அகம்மட் மற்றும் திக்ஷில டி சில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக தனஞ்சய லக்ஷன் தெரிவுசெய்யப்பட்டார். (4)

# பாண்டியா நான்காவது இடத்திற்கு பொருத்தம் - கபில்தேவ் ஆலோசனை



சமீபத்தில் நடந்து முடிந்துள்ள அவுஸ்திரேலியாவிற்கு எதிரான இருபது-20 தொடரில் ஹர்திக் பாண்டியா சிறப்பாக விளையாடி அனைவரது பாராட்டுக்களையும் பெற்றார்.

இந்த நிலையில் இருபது-20 தொடர்களில் ஹர்திக் பாண்டியாவை 4வது இடத்தில் இறக்கி சோதித்து பார்க்கலாம் என்று முன்னாள் அணித்தலைவர் கபில்தேவ் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதுமட்டுமன்றி, இருபது -20 உலகக் கிண்ணத்தை கருத்தில் கொண்டு இளம் வீரர்களை அணித்தலைவர் விராட் கோலி பரிசோதித்து புதிய அணியை உருவாக்க வேண்டும் என்றும் கபில் தேவ் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் இருபது -20 தொடரில் அட்டகாசமான பங்களிப்பை இந்திய அணிக்கு அளித்த ஹர்திக் பாண்டியாவை டெஸ்ட் தொடரிலும் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்தது.

ஆனால் அவர் பந்து வீச்சில் கவனம் செலுத்தினால் மட்டுமே தேர்வாளர்கள் அவரை தெரிவு செய்வார்கள் என்று அணித்தலைவர் விராட் கோலி தெரிவித்தார்.

இந்த நிலையில் இருபது -20 வடிவத்தில் ஹர்திக் பாண்டியாவின் செயற்பாடு குறித்து முன்னாள் அணித் தலைவர் கபில் தேவ் தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார். (4)

# ஆஸிக்கு இம்முறை அதிக பலம்

## சச்சின் தெரிவிப்பு



அவுஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை மறுதினம் அடிலெய்டில் நடைபெறவுள்ளது. இந்த டெஸ்ட் பகல்-இரவு டெஸ்டாக நடைபெறவுள்ளது.


2018-2019 சீசனில் இந்தியா 2-1 எனத் தொடரைக் கைப்பற்றி சாதனைப் படைத்தது.

ஆனால் இந்த முறை அவுஸ்திரேலியா அணி மிகவும் வலுவாக உள்ளது. இந்திய அணிக்கு மூன்று பேர் மிரட்டலாக உள்ளனர் என சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

மேலும் இது குறித்து சச்சின் டெண்டுல்கர் கூறுகையில் "கடந்த முறையை காட்டிலும் இந்த முறை அவுஸ்திரேலியா முக்கியமான மூன்று வீரர்களை கொண்டுள்ளது. அவர்கள் வோர்னர், ஸ்மித், மார்னஸ் லாபஸ்சேன் ஆகியோரை பெற்றுள்ளனர்.

கடந்த முறையை காட்டில் இந்தத் தொடருக்கான அணி மிகவும் சிறந்தது. உங்கள் அனுபவ வீரர்கள் இருவர் இல்லாதபோது, திடீரென்று அந்த வெற்றிடத்தை உணரலாம். அதைத்தான் அவுஸ்திரேலியாவும் கடந்த சீசனில் உணர்ந்தது"என்றார். (4)

# மீண்டும் இணைகிறார் ஸ்டார்க்



அவுஸ்திரேலியா அணியின் வேகப்பந்து வீச்சாளரான மிட்சல் ஸ்டார்க் மீண்டும் இணையவுள்ளார்.

இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையேயான மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் முதல் போட்டி நாளை மறுதினம் அடிலெய்டில் நடைபெறவுள்ளது.

இதற்காக இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அவுஸ்திரேலிய அணியின் நட்சத்திர வீரரான மிட்சல் தன்னுடைய பவுன்சர் பந்து வீச்சு மூலம் எதிரணிகளை மிரட்டுவார்.

தனது குடும்ப உறுப்பினர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் இந்தியாவுக்கு எதிரான இருபது-20 தொடரில் விளையாட முடியாமல் விலகினார்.

தற்போது குடும்பத்தை பார்த்துக் கொள்ளும் அனைத்து பணிகளும் முடிந்து விட்டதால் மீண்டும் அவுஸ்திரேலிய அணியில் இணைய தயாராக இருப்பதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியத்திடம் தெரிவித்துள்ளார்.

சிட்னி மைதானத்தில் விளையாடி வரும் அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடவுள்ளார். (4)

## 19 இந்திய...

நதும் அத்துமீறி கரைக்கு மிக நெருக்கமாக வந்து மீன் வளத்தை வாரி அள்ளிச் சென்ற இந்திய மீனவர்களின் மோசமான நடவடிக்கைகள் தொடர்பில் வட பகுதி மீனவர்கள் தொடர்ந்தும் கவலை வெளியிட்டு வந்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடிப்படகுகளை சுற்றிவளைத்த கடற்படையினர் அவற்றைக் கைப்பற்றியுள்ளனர். அதில் இருந்த 19 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-3)

## விசேட பொறி...

வாக்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என்று ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"தமிழ் அரசியல், சிங்கள அரசியல் கைதிகள் என எவரும் இல்லை. அரசியல் கைதிகள் என்றால் அனைவரும் ஒன்றே. அவர்களின் விடுதலைக்காக, விசேட பொறிமுறையொன்றை உருவாக்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுக்கும்.

இந்த விடயம் தொடர்பாக அரசாங்கத்தில் உள்ள சிறுபான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் கதைத்துள்ளோம். அவரும் இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழ்., வலிகாமம்...

செயலாளர் எல்.இளங்கோவன் நேற்று அறிவித்துள்ளார்.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் எழுத்துமூல ஆலோசனைகளுக்கு அமைய கல்வி அதிகாரிகளுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் வட மாகாண ஆளுநரின் அனுமதியுடன் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். (ம-3,18)

## மேலும் 6...

ஏழாலையைச் சேர்ந்த 3 பேர் மற்றும் இணுவிலைச் சேர்ந்த இருவர் மற்றும் உடுவிலைச் ஒருவர் என 6 பேர் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் மருதனார்மடம் கொரோனா வைரஸ் கொத்தணியின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 39ஆக அதிகரித்துள்ளது. (ம-3,18)

## 4 பாடசாலைகள்...

வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

வவுனியா சி.சி.ரி.எம். பாடசாலை, காமினி மகா வித்தியாலயம், தமிழ் மத்திய மகா வித்தியாலம் மற்றும் இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளுமே மூடப்படுகின்றன. (ம-3,250,299)

## வெடிபொருளை...

எரிந்து வெடித்துச் சிதறியதில் சிறுவர் உட்பட 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு யாழ்.குருநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மீன்பிடிப்பதற்கு டைனமைட் தயாரிப்பதற்காக சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்ட வெடிமருந்தை அரைக்கும் இயந்திரத்தில் அரைத்த நிலையில் குறித்த வெடிபொருள் தீ பிடித்து எரிந்துள்ளது.

இதனால் வீடு தீ பிடித்துள்ளது. இந்நிலையில் அயலவர்கள் கூடி தீயை அணைத்தபோதும் வீட்டிலிருந்த சிறுவர்கள் உட்பட 8 பேர் எரிகாயங்களுக் குள்ளாகியிருக்கின்றனர்.

காயங்களுக்குள்ளானோர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் யாழ்.பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## நாட்டில் மேலும்...

இதன்மூலம் நாட்டில் கோவிட் -19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 154ஆக உயர்வடைந்துள்ளது.

73 வயதுடைய ஒருவரும் 65 வயதுடைய ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், நாட்டில் நேற்று +688 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 33 ஆயிரத்து 478 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## பூட்டப்படும்...

பரவல் அச்சம் காரணமாக சங்கானை, மற்றும் உரும்பிராய், ஊர்காவற்றுறை சந்தைகள் பூட்டப்படுவதாக அந்தந்த பிரதேச பொது சுகாதார மருத்துவ அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

மருதனார்மடம் பொதுசந்தையை அடிப்படையாக கொண்டு பெருமளவு கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கும் நிலையில் பொது சுகாதார மருத்துவ அதிகாரிகளினால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தைகள் பூட்டப்பட்டு அங்கு வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சுகாதார பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் சந்தைகள் திறக்கப்படும்.

பி.சி.ஆர் முடிவுகள் பாதகமாக அமைந்தால் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ம-3)

## எழுமாற்றுப்..

சாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வருகை தந்த சிலரிடம் நேற்று முன்தினம் எழுமாற்றாக பெறப்பட்ட மாதிரிகளில் சிறுமி மற்றும் இளம் பெண் என 2 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா திருநாவற்குளம் மற்றும் கற்குழியைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமி, 25 வயதுடைய பெண் என இரண்டு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை பிசிஆர் பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டு கண்காணிக்கப்படும் 65 வயதுடைய ஒருவரும் நேற்று கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் நேற்று இடம்பெற்ற பிசிஆர் பரிசோதனையிலேயே அவர்கள் மூவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ம-3,250,299)

## மருதனார்மடம்...

ஒருவர் பளைக்கு சென்றது தெரிய வந்துள்ளது.

தொற்று உறுதியான குறித்த நபர் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமத்தில் இறுதிச் சடங்கு ஒன்றில் பங்கேற்றுள்ளார்.

அதில் கலந்து கொண்டவர்களை தனிமைப்படுத்த சுகாதாரத் தரப்பினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ம-3)

## யாழில்...

இருக்க வேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"யாழ்.மாவட்டத்தில் மருதனார் மட சந்தை பகுதியில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இது வரையில் 39 பேர் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

அவர்கள் ஊடாக யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்கும் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகப்படுவதனால், பி.சி.ஆர் பரிசோதனைகளை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்.

யாழ்.மக்கள் மிக அவதானமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடக்குமாறு கோருகின்றோம். ஏதாவது அறிகுறிகள் தென்பட்டால், சுகாதார பிரிவினருக்கு அறிவியுங்கள்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் இது வரை சுற்று நிருபங்கள் எவையும் எமக்கு கிடைக்கப் பெறவில்லை. அது கிடைத்தும் அந்த பகுதிக்கான பிரதேச செயலாளர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3,18,101)

## யாழ்.மாவட்டத்...

ஏற்கெனவே 744 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் சுமார் 400 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்மூலம் தற்போது மொத்தமாக 1144 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

நேற்று முன்தினம் தொற்று உறுதி செய்யப்பட்ட 26 தொற்றாளர்களும் மாவட்டத்தில் பரவலாக காணப்படுவதனால், ஒரு பிரதேசத்தை மாத்திரம் முடக்கி பயனில்லை என்பதனாலேயே உடுவில் பிரதேச முடக்கம் தளர்த்தப்பட்டுள்ளது.

ஆனால் மருதனார்மடம் சந்தை மற்றும் அதனோடு அருகிலுள்ள கடை தொகுதிகள் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் மூடப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ம-3,33)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1640 திகதி 2020.12.14
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 06 10 39 69
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 14/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0703
வெற்றி எழுத்து U சுப்பர் இலக்கம் 14 வெற்றி இலக்கங்கள் 27 38 60 70

மஹஜன சம்பத
திகதி 2020. 12. 14
சீட்டிழுப்பு இலக்கம் 4336
ஆங்கில எழுத்து D வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 8 7 8 3 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 14.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2631
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 04 15 48 80
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.12.14
சீட்டிழுப்பு இலக்கம் - 373
Z 08 11 34 49
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி
கிழமை: திங்கள்
சீட்டிழுப்பு இல: 1132
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 14.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 90,676,380
வெற்றி இலக்கங்கள் 28 56 58 75 ஆங்கில எழுத்து Z
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


சனிதா
கிழமை: திங்கள்
சீட்டிழுப்பு இல: 3462
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 14.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 35,980,598
வெற்றி இலக்கங்கள் 23 30 31 58 ஆங்கில எழுத்து J
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சுப்பர் ஜக்பொட் 2,180,788/=
திகதி : 14.12.2020
வெற்றி வாரம் : 3013
வர்ணம் : மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 23 28 42 57 கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,257,280

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1306 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 14/12/2020 தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் N 11 25 62 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் 57,996,722

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1715
சீட்டிழுப்பு திகதி 14/12/2020
வெற்றி இலக்கங்கள் 08 15 21 64 ஆங்கில எழுத்து A
ரூ. 57,002,532
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# மணிவிழா வாழ்த்துகள்



Congratulations

திருமதி
## தவமலர் ஜெகநாதன்
( SLTS - I )

எமது பாடசாலையில் நீண்டகாலமாகக் கடமையாற்றி
இன்று 15.12.2020 இல் மணிவிழாக் காணும்
திருமதி **தவமலர் ஜெகநாதன்** அவர்கள்
நீடூழி காலம் சிறப்பாக நோய்நொடியின்றி வாழ
வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

30.09.1988 - 31.12.1990
நுவ / லபுக்கல தமிழ் வித்தியாலயம் இல. 1

01.01.1991 - 31.12.1992
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

24.03.2004 - 20.12.2008
நுவ / நானுஓயா தமிழ் வித்தியாலயம்

21.12.2008 - 01.06.2014
யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்

02.06.2014 - 14.12.2020
யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி



(15.12.2020)

வாழ்த்துவோர் :
**பாடசாலை நலன்புரிச் சங்கம்**
**யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி**

(4963)

# மக்களின் ஒன்றுபட்ட குறிக்கோளை அடைவதே எமது இலக்காகும்

## நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே தாம் பாதீடு மீதான வாக்கெடுப்பின் போது நடுநிலை வகித்ததாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாராந்த கேள்வி -பதில் அறிக்கையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

எதிர்ப்பு அரசியலால் நாம் கண்ட நன்மை ஒன்றுமில்லை.

அத்துடன் இணக்க அரசியல் என்று கூறி சுயநலவாதிகள் இணக்க அரசியல் செய்து வந்ததால் எமது மக்கள் கண்ட நன்மை ஒன்றுமில்லை.

20ஆவது திருத்தச்சட்டத்தை எதிர்த்து வாக்களித்திருந்தேன்.

பொதுவாக எதிர்த்து வாக்களிப்பதே எனது நிலைப்பாடு என்று பலர் எண்ணுகின்ற போதிலும் நான் அவ்வாறு எண்ணவில்லை.

எதிர்க்கட்சிகளின் கடமை அரசாங்கத்தை எந்த நேரமும் எதிர்ப்பதே என்ற கருத்தை ஏற்கமாட்டேன்.

எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை சரியான திசையில் பயணிக்க வழி நடத்த வேண்டும் என்பதே எனது கருத்து.

அரசாங்கம் பெரும்பான்மை நிலையைப் பெற்றுள்ளது.

நாங்கள் அவர்களுக்கு எதிராக வாக்களிப்பதும் நடுநிலைமை வகிப்பதும் ஒன்றுதான்.

ஆனால் மாற்றத்தை ஏற்படுத்தாத எந்தச் செயலோ பேச்சோ அர்த்தமற்றது.

ஆகவே நான் வாக்களிக்காமல் இருப்பதே மேல் என்று எண்ணினேன்.

தொடக்கத்தில் இருந்தே எதிர்ப்பு அரசியலைக் காட்டி வந்த முன்னைய அரசியல்வாதிகள் தொடர்ந்து எதிர்ப்பு அரசியலையே வெளிப்படுத்தி வந்திருந்தார்கள்.

அவர்களை எதிரிகளாகவே அப்போதைய அரசாங்கத்தினர் பார்த்தார்கள்.

அதனால் அவர்களுடன் அரசாங்கங்களும் பேசவில்லை.

இவர்களாலும் அவர்களுடன் பேசமுடியவில்லை.

நான் அவ்வாறு எனது காலத்தைத் தொடங்க விரும்பவில்லை.

எமது அரசியல் கைதிகள் பற்றி அரசாங்கத்துடன் பேச வேண்டி இருக்கின்றது.

தமிழ் அரசியல்வாதிகள் இதுவரையில் போர்களை வென்று யுத்தத்தைத் தோற்றுவிட்டார்கள்.


மக்களின் தற்போதைய ஒன்றுபட்ட குறிக்கோளை அடைவதே எமது இலக்காகும்.

அரசாங்கத்திற்கு எதிராகப் பேசுவதோ வாக்களிப்பதோ முக்கியம் இல்லை.

அரசாங்கத்தின் மனதை மாற்றுவது எம் சார்பாக அவர்களைத் திசை மாற்றுவதே எனது கடமையும் கடப்பாடுமாகும் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-3)

# மரண அறிவித்தல்

தோற்றம்
21 – 10 – 1946



மறைவு
14 – 12 – 2020

## செல்லர் நடராசா

**(ஓய்வுபெற்ற சாலை முகாமையாளர் - இ.போ.ச, காரைநகர்)**

மாவிட்டபுரம், மதவடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கீரிமலை வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் நடராசா நேற்று (14.12.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் -ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் தங்கமலர், தங்கராசா, தியாகராசா, நீலா, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கமல்ராஜ், பிரதாபன் (இ.போ.ச - காரைநகர்), சதீஸ்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரேகா (கிளி / கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை), ரோகினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பவிஷாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4965)

கீரிமலை வீதி.
பண்டத்தரிப்பு.

077 640 4036
077 055 9177

தகவல்:-
குடும்பத்தினர்

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், ராசபாத வீதியில் மெயின் றோட்டுடன் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

( 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.)

( ராச வீதிச் சந்திக்கு அருகாமையில். )

( தரகர் தேவையில்லை. )

தொடர்புகளுக்கு
077 623 4204
077 288 0152

(4966)

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK- 1025/=Kg
0768226240

எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-848)

**காணித் துண்டுகள் விற்பனைக்கு**

சாவகச்சேரி நுணாவில் IOC பெற்றோல் செற் அண்மையில், A9 வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் 2 பரப்பு, ஒரு பரப்பு, 3 பரப்பு காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு.

பரப்பு 485,000/-

(C-915)

☎- 071 735 5929

**காணி விற்பனைக்கு**

இருபாலை கிழக்கு, C.C பாடசாலை வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

( தரகர் தேவையில்லை. )

( பரப்பு 5 இலட்சம் )

தொடர்புகளுக்கு
076 640 0974, 077 805 1655

(4964)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.